மின்னிதழ்

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2023 செப்டெம்பர் 16 சனிக்கிழமை

# தினகரன்


THINAKARAN

තිනකරන්

வரு. 91 இல. 220 | Saturday 16, September, 2023 | 10 பக்கங்கள் | 50/-


## தேசிய சிறைக்கைதிகள் தினம்

# கைதிகள் 933 பேருக்கு விசேட பொதுமன்னிப்பு



தேசிய சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு 933 பேருக்கு ஜனாதிபதியின் விசேட பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக, மேலதிக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

06

# நாட்டை அராஜக நிலைக்கு திருப்ப முனையும் நபர்கள் குறித்து விரிவான விசாரணை அவசியம்

## CIDயில் அமைச்சர் பந்துல நேற்று முறைப்பாடு



நாடு வீழ்ந்திருக்கும் இடத்திலிருந்து நாட்டை மீட்டெடுப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்படும் மக்களை அச்சுறுத்தி நாட்டை மீண்டும் அராஜக நிலைக்கு திருப்ப முற்படும் நபர்கள் தொடர்பாக விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வுப் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன

06



## கியூபா – இலங்கை அரச தலைவர்களுக்கிடையே சந்திப்பு

# இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவது குறித்து ஆராய்வு

## சர்வதேச விவகாரங்களில் இலங்கைக்கு கியூபாவின் ஆதரவு

'ஜி 77+ சீனா' உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக கியூபாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கியூபா ஜனாதிபதி மிகுவல் டியாஸ் கனெல் பெர்முடெஸுக்குமிடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் (14) பிற்பகல் நடைபெற்றது.

கியூபாவிலுள்ள 'புரட்சியின் அரண்மனை'க்குச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கியூபா ஜனாதிபதி அன்புடன் வரவேற்றதுடன்

06



## ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் S.I.இமாம் தலைமையில்

# சனல்- 4 காணொளி விவகாரம் விசாரணை செய்ய புதிய குழு



## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமனம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக 'சனல் 4' தொலைக்காட்சியின் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்காக விசேட குழுவொன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

இந்த விசேட குழுவானது, ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ்.ஐ.இமாம் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளதுடன், ஓய்வுபெற்ற விமானப்படைத் தளபதி ஏ.சி.எம்.ஜயலத் வீரக்கொடி மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ஷ ஏ.ஜே.சோசா ஆகியோர் இந்தக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மற்றும் அடிப்படை உரிமை மனுக்கள் மீதான தீர்ப்பை பரிசீலனை செய்ய உயர் நீதிமன்றத்தினால் திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய இந்த மனுக்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் 2ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக நேற்று (15) நீதிமன்றத்தினால் திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**6 பேர் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு**

புவனேக அலுவிஹாரே தலைமையிலான 6 பேர் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வின் முன்பாக இது தொடர்பான ஆவணங்கள் நேற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த மனுக்களை பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பலர் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் அச்சுறுத்தலை கட்டுப்படுத்த துரித நடவடிக்கை

## பொதுமக்களிடமிருந்து கருத்துக் கோரல்

நாட்டில் வேகமாகப் பரவிவரும் போதைப்பொருள் அச்சுறுத்தலை உடனடியாக கட்டுப்படுத்தி ஒழிப்பதற்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வழிமுறைகள் தொடர்பான முன்மொழிவுகளையும் கருத்துகளையும் அனுப்பி வைப்பதற்கான வாய்ப்பு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வழிமுறைகளை ஆராய்ந்து

06



# இரண்டாம் கட்ட கடன் வசதியை பெறுவதில் எந்தச் சிக்கலும் இல்லை

## நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க உறுதி



சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் வசதியை பெற்றுக்கொள்வதற்கு எவ்வித சிக்கல்களும் ஏற்படாதென, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான முதலாவது மீளாய்வுக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட இந்தக் கடன் திட்டத்திலிருந்து இடையில்

06

# பத்து நாட்களுக்குள் குடாநாட்டில் குற்றச்செயல்களை கட்டுப்படுத்தவும்

## பாதுகாப்பு தரப்பினரிடம் அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை



*யாழ்.விசேட நிருபர்*

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வரும் மணல் கடத்தல், கால்நடைகள் கடத்தல் மற்றும் ஏனைய குற்றச்செயல்களை 10 நாட்களுக்குள் கட்டுப்படுத்துமாறு பாதுகாப்பு தரப்பினரிடம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டார்.

யாழ். குடாநாட்டில் அண்மைய நாட்களாக இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல் கடத்தல், கால்நடைகள் கடத்தல் உள்ளிட்ட ஏனைய சட்டவிரோத சம்பவங்கள் தொடர்பாக ஆராயும் விசேட

06

# சீன ஆய்வுக் கப்பலின் வருகை திகதி தீர்மானிக்கப்படவில்லை

## அனைத்தும் இராஜதந்திர ரீதியில் கையாளப்படும்



சீனாவின் 'ஷி யான் 6' ஆய்வுக்கப்பலின் வருகைக்கான திகதி உள்ளிட்ட விடயங்கள் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்பதுடன், இந்த விடயங்கள் இராஜதந்திர ரீதியில் கையாளப்படும் என, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இந்துசமுத்திர வலய நாடுகள் அமைப்பின் 23ஆவது அமைச்சர்கள் மட்டக் கூட்டம் எதிர்வரும் ஒக்டோபர் 10ஆம், 11ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டம் தொடர்பாக

06

# பிரபல நடன இயக்குநர் பிரபுதேவா இலங்கையில்

இந்திய திரையுலகத்தின் பிரபல நடன இயக்குநரும் திரைப்பட நடிகருமான பிரபுதேவா இலங்கைக்கு வருகை தந்துள்ளார். இவர் நேற்று முன்தினம் சென்னையிலிருந்து ஸ்ரீலங்கன் ஏயார் லைன்ஸ் விமானம் மூலம் இலங்கையை வந்தடைந்துள்ளார். இயக்குநர் சாம் ரொட்ரிக்ஸ் இயக்கத்தில் வெளிவரவுள்ள 'மூசாய்' திரைப்படத்தில்

06



## ஆட்ட நிர்ணய சதி குற்றச்சாட்டு;

# சசித்ர சேனநாயக்கவுக்கு விளக்கமறியல் 25வரை நீடிப்பு



ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் சசித்ர சேனநாயக்க எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணை

06

# கோழி இறைச்சி, முட்டை விலை குறைவடையும்

## முட்டை இறக்குமதி செய்யும் நிலை ஏற்படாது



அடுத்த வருடம் முதல் முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலை வீழ்ச்சி அடையுமென்பதுடன், மீண்டும் விலை அதிகரிப்பு ஏற்படாதெனவும், கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இந்நிலையில், அடுத்த வருடம் முதல் முட்டைகளை இறக்குமதி

06

## கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி

# அகழ்வின் 09ஆவது நாள் 17 எலும்புக்கூடுகள் மீட்பு

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் ஒன்பதாவது நாள் அகழ்வுப் பணிகளின் போது நேற்று மூன்று மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகளுடன், விடுதலைப் புலிகளின் இலக்கத் தகடொன்றும் மீட்கப்பட்டுள்ளது. இதுவரையில்

06



# மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை



மூன்று மாவட்டங்களுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்நிலையில், கொழும்பு மாவட்டத்தின் சீதாவக்கை பிரதேசம் மற்றும் கேகாலை மாவட்டத்தின் வரக்காபொல பிரதேசம் ஆகியவற்றுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், இரத்தினபுரி மாவட்டத்தின் குருவிட்ட, இரத்தினபுரி மற்றும் எஹெலியகொட ஆகிய பிரதேசங்களுக்கு மஞ்சள் நிற மண்சரிவு முன்னெச்சரிக்கை அறிவிப்பை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் விடுத்துள்ளது.

# மனித எச்சங்களை மறைக்க எடுக்கும் முயற்சியே விகாரைகள்

## செல்வம் அடைக்கலநாதன் MP குற்றச்சாட்டு



மனித எச்சங்கள் காணப்படுவதை மறைப்பதற்காகவே பௌத்த விகாரைகளை அமைத்தும் இராணுவம் நிலங்களை கையகப்படுத்தியும் வருகின்றனரென்ற சந்தேகம் எழுவதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன், கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியிலிருந்து

06

# மக்களை ஏமாற்றும் கருத்துகளை தெரிவித்துவரும் செல்வம் எம்.பி.

## EPDP ஊடகப் பேச்சாளர் ஸ்ரீரங்கேஸ்வரன்



*யாழ். விசேட நிருபர்*

பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வெளியிட்டுள்ள கருத்துகளை முற்றாக மறுப்பதாக, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். எதிர்வரும் 2024ஆம் ஆண்டு தேர்தலை இலக்கு வைத்து

06

# அரசியல்வாதிகளிடமிருந்து பொலிஸ் வேறுபடுத்தப்பட வேண்டும்

## துறைசார் மேற்பார்வைக் குழு தெரிவிப்பு

அரசியல்வாதிகளிடமிருந்து பொலிஸை வேறுபடுத்த வேண்டுமென்று பொலிஸ் ஆணைக்குழுவிடம் வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு தெரிவித்தது. மேற்படி குழு

06



# சர்வதேச செய்திகள்

## ஜோ பைடன் மகன் மீது 3 குற்றச்சாட்டுகள் பதிவு



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் மகன் ஹண்டர் பைடன் துப்பாக்கியை வாங்கும்போது பொய் கூறியதாக 3 குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளார்.

அமெரிக்க வரலாற்றில் பதவியில் இருக்கும் ஜனாதிபதியின் பிள்ளை குற்றச்சாட்டுகளை எதிர்நோக்குவது இது முதல்முறையாகும்.

2018ஆம் ஆண்டில் போதைப் பொருள் பயன்படுத்தியபோது ஹண்ட்டர் ஒரு துப்பாக்கியை வாங்கியதாக டெலவேர் மாநில நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

போதைப்பொருள் உட்கொள்வதை ஹண்ட்டர் மறைத்ததாக வழக்கறிஞர்கள் கூறுகின்றனர். அந்தத் தகவல் தெரியவந்திருந்தால் ஹண்ட்டர் துப்பாக்கியை வாங்கியிருக்க முடியாது.

தமது குடும்ப உறுப்பினர்களை விசாரிக்க நீதி அமைச்சுக்குச் சுதந்திரம் இருப்பதாக ஜனாதிபதி பைடன் கூறியுள்ளார்.

ஹண்டர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவருக்கு அதிகபட்சம் 25 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் 750,000 டொலர் அபராதமும் விதிக்கப்படலாம்.

ஜோ பைடன் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் இரண்டாவது தவணைக்காக போட்டியிட திட்டமிட்டிருக்கும் நிலையில் இந்த வழக்கு அவருக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

## புட்டின்—கிம் சந்திப்புக்கு பல நாடுகளும் கவலை



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கும் வட கொரியத் தலைவர் கிம் ஜொங் உன்னுக்கும் இடையே நடந்த உச்சநிலைச் சந்திப்பு குறித்து அமெரிக்கா, ஜப்பான், தென் கொரியா ஆகிய நாடுகள் கவலை தெரிவித்துள்ளன.

அந்த நாடுகளின் தேசியப் பாதுகாப்பு அதிகாரிகள் அது குறித்துக் காணொளி வழி கலந்து பேசியுள்ளனர்.

வட கொரியாவிலிருந்து ரஷ்யாவுக்கு ஆயுதங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டால், அது பியோங்யாங்கிற்கு எதிரான ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தீர்மானங்களை மீறும் செயலாக இருக்கும் என்று அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

மொஸ்கோவும் பியோங்யாங்கும் இராணுவ ஒத்துழைப்பில் ஈடுபடக் கூடாது என அதிகாரிகள் வலியுறுத்தினர்.

தென் கொரியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் ரஷ்யாவும் வட கொரியாவும் அதற்கு விலை கொடுக்க வேண்டிவரும் என்று தென் கொரிய தேசியப் பாதுகாப்பு சபை எச்சரித்தது. இந்நிலையில் கிம் ரஷ்யாவில் இன்னும் சில நாட்கள் தங்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மர்ம பொருட்கள் பற்றி நாசா புதிய அறிக்கை



நூற்றுக் கணக்கான அடையாளம் காணப்படாத மர்மப் பொருட்கள் பற்றிய சம்பவங்களில் அவைகளின் பின்னணியில் வேற்றுக் கிரகவாசிகள் இருப்பதாற்கான எந்த ஆதாரமும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா வெளியிட்ட விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. எனினும் அதற்கான சாத்தியத்தை அது மறுக்கவில்லை.

அடையாளம் காணப்படாத மர்மப் பொருள் தொடர்பில் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட நாசாவின் அறிக்கை கடந்த வியாழக்கிழமை (14) வெளியிடப்பட்டது.

36 பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கை தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான ரீதியாக அவதானிப்புகளை உள்ளடக்கியுள்ளது. இதன் கடைசி, பக்கத்தில் "நாசா விசாரணை நடத்திய நூற்றுக்கணக்கான அடையாளம் காணப்படாத அசாதாரண நிகழ்வுகளின் பின்னணியில் வேற்றுக் கிரகவாசிகள் இருப்பதாக முடிவுக்கு வருவதற்கு எந்த காரணமும் இல்லை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் வேற்றுக் கிரகவாசிகள் இருப்பது பற்றி இந்த அறிக்கையில் முடிவு ஒன்றுக்கு வரவில்லை. அடையாளம் தெரியாத வேற்றுக் கிரகவாசிகளின் தொழில்நுட்பம் பூமியில் இயங்கக் கூடும் என்ற சாத்தியத்தை நாசா மறுக்கவில்லை.

## லிபிய வெள்ளம்:

# தொடர்ந்து சடலங்கள் மீட்கப்படும் நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை வேகமாக அதிகரிப்பு




லிபியாவின் பயங்கர வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட சடலங்கள் தொடர்ந்து மீட்கப்பட்டு வரும் நிலையில் அங்கு உயிரிழப்பு எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது.

இந்த அனர்த்தத்தில் 11,300 க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருப்பது உறுதியாகி இருப்பதாக லிபிய செம்பிறை சங்கம் தெரிவித்துள்ளது. லிபியாவை கடந்த ஞாயிறு மற்றும் திங்கட்கிழமைகளின் தாக்கிய டானியல் புயல் காரணமாக கிழக்கு நகரான டெர்னாவில் இரு அணைகள் உடைப்பெடுத்து வெள்ள நீர் சுனாமி அலைபோல் தாக்கியுள்ளது.

குடியிருப்புப் பகுதிகள் கடலில் அடித்துச் செல்லப்பட்டிருக்கும் நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை கூறப்படுவதை விடவும் 20,000 வரை அதிகரிக்கக் கூடும் என்று டெர்னா நகர மேயர் தெரிவித்துள்ளார்.

இது ஒரு இயற்கை அனர்த்தம் என லிபிய அரசியல்வாதிகள் சித்தரிக்க முயன்றபோதும் லிபியாவில் நீடிக்கு அரசியல் மோதல் மற்றும் பொது உட்பட்டமைப்பின் மோசமான பாராமரிப்பு மற்றும் ஊழல் ஆகியவை இதற்கு காரணமாகி இருப்பதாக நிபுணர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

லிபியாவின் நீண்டகால ஆட்சியாளரான முஅம்மர் கடாபி 2011 ஆம் ஆண்டு பதவி கவிழ்க்கப்பட்டது தொடக்கம் அங்கு அரசியல் மோதல் நீடிப்பதோடு நாட்டில் இரண்டு போட்டி அரசுகள் இயங்கி வருகின்றன. இது டானியல் புயல் போன்ற இயற்கை அனர்த்தங்களுக்கு தயாராக முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

2002 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த பேரனர்த்தத்திற்கு காரணமான அணைகள் முறையான வகையில் பராமரிக்கப்படவில்லை என்று டெர்னா நகர பிரதி மேயர் அஹமது மத்ரூத், அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு அளித்த போட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு ஒமர் அல் முக்தார் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வு அறிக்கையில் இந்த இரண்டு அணைகளும் கூடிய அவதானத்திற்கு உட்பட வேண்டும் என்று எச்சரிக்கப்பட்டிருந்தது. எனினும் அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

இதில் பெரும்பாலான உயிரிழப்புகளை தவிர்க்கக் கூடியதாகவே இருந்தது என்று ஐ.நா அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

"காலநிலை அவதானிப்பு சேவைகள் சாதாரணமாக செயற்பாட்டிருந்தால், முன்கூட்டி எச்சரிக்கை விடுக்க முடிந்திருக்கும்" என்று உலக வானிலை அமைப்பின் தலைவர் பீட்டர் தலாஸ் ஜெனீவாவில் செய்தியாளர்களிடம் குறிப்பிட்டுள்ளார். "அவசர முகாமைத்துவ நிர்வாகத்தால் மக்களை அப்புறப்படுத்தி இருக்க முடியும்" என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிழக்கு லிபிய நிர்வாகம் கடந்த சனிக்கிழமை புயல் குறித்து பொதுமக்களை எச்சரித்துள்ளது. இதன்போது கடலோரப் பகுதிகளில் இருக்கும் மக்களை கடல் சீற்றத்தில் இருந்து தப்புவதற்கு அங்கிருந்து வெளியேறும்படி எச்சரித்தபோதும் அணை உடைப்பெடுக்கும் ஆபத்து பற்றி எந்த எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை.

சுமார் ஒரு இலட்சம் மக்கள் தொகை கொண்ட டெர்னா நகரில் இந்த திடீர் வெள்ளத்தால் பெரும்பகுதி அழிவுக்கு உள்ளாகியுள்ளது. இங்கு தொடர்ந்து 10,100 பேர் காணாமல்போயிருப்பதாக மரி எல் ட்ரெஸ் உதவிக் குழுவின் செயலாளர் நாயகம் ஏ.பீ செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார். மறுபுறம் டானியல் புயல் காரணமாக நாட்டின் மற்றப் பகுதியில் சுமார் 170 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்கள் பாரிய புதைகுழிகளில் அடக்கம் செய்யப்பட்டு வருதாக கிழக்கு லிபியாவின் சுகாதார அமைச்சர் ஒத்மான் அப்துல் ஜலீல் தெரிவித்துள்ளார். கடந்த வியாழக்கிழமை (14) மாத்திரம் 3000க்கும் அதிகமான சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டிருப்பதோடு மேலும் 2000 சடலங்களை அடக்கம் செய்வதற்கான பணிகள் இடம்பெற்று வருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான உடல்கள் டெர்னாவுக்கு வெளியில் அடக்கம் செய்யப்படுவதோடு மற்றவை அருகில் இருக்கும் நகரங்கள் மற்றும் சிறு நகரங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நகரில் உள்ள கட்டட இடிபாடுகளிலும் டெர்னாவுக்கு அப்பால் இருக்கும் கடல் பகுதியிலும் மீட்பாளர்கள் தொடர்ந்து தேடுதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில் அடித்துவரப்பட்ட சேறு மற்றும் இடிபாடுகளில் பலரும் புதையுண்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. 13 அடி வரை உயர்ந்த வெள்ள நீரில் வாகனங்கள் தலைகீழாக புரட்டப்படிருப்பதோடு மரங்கள் வேரோடு பிடுங்கப்பட்டுள்ளன. வெள்ள நீரால் வீதிகள் முடக்கப்பட்டிருப்பதால் மீட்பு நடவடிக்கைக்கு கனரக வாகனங்களை எடுத்து வருவதிலும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

லிபியாவின் கிழக்கு மலைப்பகுதியில் இருந்து நகருக்குள் ஓடும் வாதி டெர்னா ஆறு டெர்னா நகர் வழியாகச் சென்று கடலில் கலக்கிறது.

இது பெரும்பாலும் வறண்ட நிலையிலேயே காணப்படும். ஆனால், வரலாறு காணாத மழையால் இந்த ஆற்றில் கடுமையான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் டெர்னா நகரத்தில் இருந்து 12 கி.மீ தொலைவில் மேல் பகுதியில் அமைந்திருந்த அணை முதலில் உடைந்தது.

அதன் நீரை இரண்டாவது அணையை நோக்கித் திருப்பியதாக நீர் பொறியியல் வல்லுநர்கள் கூறுகின்றனர். மேல் அணையின் கொள்ளளவு 53 மில்லியன் கன அடி. ஆனால், கீழ் அணை, 795 மில்லியன் கன அடி கொள்ளளவு உடையது.

மேல் அணையில் இருந்து தண்ணீர் திருப்பி விடப்பட்டாலும் முறையான பராமரிப்பு இல்லாததால் இரு அணைகளும் உடைய நேர்ந்ததாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இரண்டு அணைகளும் உடைந்து தண்ணீர் கணிக்க முடியாத வேகத்தில் நகருக்குள் சுனாமியைப் போல் சீறிப் பாய்ந்தது.

சுனாமியை போன்ற அந்தப் பெரும் வெள்ளத்தில், நகரம் முழுவதுமாக கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்டது. அணை உடைந்ததை அறியாமல் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த பல்லாயிரக்கணக்கானோர் நீரில் மூழ்கியுள்ளனர்.

## பன்றியிலிருந்து மனிதனுக்கு சிறுநீரக மாற்றுச் சிகிச்சை



மூளைச்சாவு அடைந்த நோயாளிக்கு மரபணு மாற்றப்பட்ட பன்றியின் சிறுநீரகத்தைப் பொருத்திய அமெரிக்க அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் 61 நாட்கள் நீடித்த பரிசோதனையை முடித்துக்கொண்டுள்ளனர்.

இனங்களுக்கு இடையிலான மாற்று அறுவைச் சிகிச்சையை மேம்படுத்தும் நோக்கில் அந்தப் பரிசோதனை செய்யப்பட்டது.

அமெரிக்காவில் 103,000 பேர் உடலுறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைக்காகக் காத்திருக்கின்றனர். அவர்களில் 88,000 பேருக்குச் சிறுநீரக அறுவைச் சிகிச்சை தேவைப்படுகிறது.


கடந்த 2 மாதங்களாக மிக தீவிரமான கண்காணிப்பும் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

அதன் அடிப்படையில் எதிர்காலம் குறித்து நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக நியூயோர்க் பல்கலைக்கழகத்தின் மாற்று அறுவைச் சிகிச்சைத் துறை பணிப்பாளர் டொக்டர் ரொபர்ட் மோண்ட்கோமரி கூறியுள்ளார். இந்த அறுவைச் சிகிச்சையை டொக்டர் மோண்ட்கோமேரி 5ஆவது முறையாகச் செய்துள்ளார்.

2021இல் அவர் உலகின் அத்தகைய முதல் மாற்று அறுவைச் சிகிச்சையைச் செய்தார்.

பன்றிகளின் உறுப்புகள் சிறியவையாக இருப்பதாலும் பன்றிகளின் எண்ணிக்கை அதிகம் என்பதாலும் இப்போதைக்கு அவைதான் மனிதனுக்கு உடலுறுப்பு தானம் செய்ய ஏற்றவையாக இருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## டயானாவின் கம்பளிச்சட்டை 1.1 மில். டொலருக்கு ஏலம்



காலஞ்சென்ற பிரிட்டன் இளவரசி டயானா இளம் வயதில் அணிந்த சிவப்பு நிற கம்பளிச் சட்டை ஒன்று 1.1 மில்லியன் டொலருக்கு ஏலம் விடப்பட்டுள்ளது. இணைய ஏல விற்பனையிலேயே இது விலை போனதாக சௌதபிஸ் ஏல நிறுவனம் தெரிவித்துள்ளது.

1981 ஆம் ஆண்டு அப்போது இளவரசராக இருந்த சார்ள்ஸுடன் திருமண நிச்சயதார்த்தம் இடம்பெற்ற பின்னர் தனது 19ஆவது வயதில் டயானா இந்த கம்பளிச்சட்டையை அணிந்திருக்கும் புகைப்படம் பிரபலமானதாகும்.

இந்நிலையில் கடந்த வியாழனன்று (14) இடம்பெற்ற ஏலத்தில் இந்த கம்பளிச்சட்டை 50,000 தொடக்கம் 80,000 டொலர்கள் வரை ஏலம் போகும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் கடும் போட்டிக்கு பின்னர் 10 மடங்கு விலையில் ஏலம்போயுள்ளது.

எனினும் ஏலத்தில் இந்த கம்பளிச் சட்டையை யார் வாங்கினார் என்ற விபரம் வெளியிடப்படவில்லை.

இது அதிக விலைபோன இளவரசி டயானாவுக்கு சொந்தமான ஆடையாக பதிவானது. இதற்கு முன்னர் அவரது மேலங்கி ஒன்று 604,000 டொலர்களுக்கு ஏலம்போனது.

## சேற்றில் தரைதட்டிய சொகுசு கப்பல் மீட்பு



கடந்த திங்கட்கிழமை தொடக்கம் கீர்ன்லாந்தில் சேற்றுப் பகுதியில் சிக்கி இருந்த சொகுசு கப்பல் ஒன்று வெளியே கொண்டுவரப்பட்டுள்ளது.

வடகிழக்கு கீரின்லாந்து தேசிய பூங்க பகுதிக்குள் 206 பயணிகளுடன் தரை தட்டி இருந்த கப்பலை கடந்த வியாழக்கிழமை (14) கீரீன்லாந்து ஆய்வு இழுவை படகு ஒன்று மீட்டுள்ளது.

கப்பலில் இருந்த எவருக்கு காயம் ஏற்படவில்லை என்று அதன் உரிமை நிறுவனமான சன்ஸ்டோன் குறிப்பிட்டுள்ளது. எனினும் கப்பலில் இருந்த சிலருக்கு கொவிட்–19 ஏற்பட்டிருப்பதாக அதன் சுற்றுலா செயற்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு கீரின்லாந்து தேசிய பூங்க என்பது பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் நாடுகளை ஒன்றிணைத்த அளவு பெரிதானதாகும். இங்கு பனிப்பாறைகள் மற்றும் மலைகள் பிரபலமானதாகும். துருவக் கரடிகள் போன்ற விலங்குகளும் இங்கே உள்ளன.

சொகுசு கப்பல் சிக்கியிருந்த காலத்தில் கப்பலில் இருந்த பயணிகள் தொலைவில் தெரியும் பனிமலைகளை கண்டு ரசித்து வந்ததாக கூறப்பட்டது.



# மொரோக்கோவில் பூகம்பத்திற்கு முன்னர் வானில் மர்மமான ஒளி

மொரோக்கோவில் பூகம்பம் ஏற்படுவதற்கு முன் வானத்தில் மர்மமான ஒளி தென்பட்டது சமூக ஊடகத் தளங்களில் விரிவாகப் பகிரப்பட்டு வருகிறது.

வானத்தில் திடீரென்று நீல வெளிச்சம் தோன்றுகிறது. சில நொடிகளில் அது மறைகிறது. பின்னர் மீண்டும் ஒளி தோன்றுகிறது.

பூகம்பம் ஏற்படும் இடங்களில் வானத்தில் அத்தகைய ஒளி தென்படுவது தொடர்ச்சியான நிகழ்வாக உள்ளது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் கூட அப்படி ஒளி காணப்பட்டது. 18, 19, 20 ஆகிய நூற்றாண்டுகளில் கிட்டத்தட்ட 65 பூகம்ப சம்பவங்களில் ஒளி தென்பட்டதாகப் வரலாற்றுப் பதிவுகள் உள்ளன. சில சமயம் ஒளி மின்னல் வேகத்தில் மறைந்துவிடும். சில சமயம் அது பல நிமிடங்கள் மிளிரும். ஒளி பல்வேறு வண்ணங்களிலும் தோன்றியுள்ளதாக கூறப்படுகிறது. எனினும் அது ஏன் ஏற்படுகிறது என்பது விஞ்ஞானிகளிடையே மர்மமாகவே உள்ளது.

வானத்தின் ஒளிக்கும் பூகம்பத்திற்கும் தொடர்பு உள்ளதா என்பது தெரியவில்லை. எனினும் இந்த ஒளி தோன்றும் சம்பவத்தில் உண்மை இருப்பதாக அமெரிக்க புவியியல் ஆய்வு நிறுவனத்தில் பணிபுரிந்த ஓய்வுபெற்ற புவியியல் நிபுணரான ஜோன் டெர் தெரிவித்துள்ளார்.

மொரோக்கோவில் இருந்து கிடைத்திருக்கும் இந்த வீடியோக்கள் 2007 பெருவின் பிஸ்கோவில் இடம்பெற்ற பூகம்பத்தின்போது பாதுகாப்பு கெமராவில் பதிவான ஒளியை ஒத்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

### இந்துசமுத்திர வலயத்துக்கான

# இலங்கையின் தொலைநோக்கு திட்டம் நேற்று வெளியிடப்பட்டது

## பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் சுற்றாடல் அடிப்படையில் பல புதிய திட்டங்கள் –சாகல ரத்நாயக்க தெரிவிப்பு

கொவிட்19 தொற்றுக்குப் பின்னர் இலங்கையின் தற்போதைய பொருளாதார மீட்சிக்கான வலுவான மறுசீரமைப்பு மற்றும் மறுமலர்ச்சி நிகழ்ச்சிநிரல்களுடன் இலங்கையை, இந்துசமுத்திர வலயத்துக்கு உயர்வான இடத்துக்கு கொண்டு செல்ல அவசியமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதாக, தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

சர்வதேச ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்வதற்கு இலங்கையின் மறுசீரமைப்பு மற்றும் பொருளாதார நிலைத்தன்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய சாகல ரத்நாயக்க, ஒரு நாடென்ற வகையில் நிலைத்தன்மை, நம்பகத்தன்மையுடனான விம்பத்தை தக்கவைப்பதினூடாக உலகில் இலங்கையின் அபிமானத்தை பாதுகாக்க முடியுமெனத் தெரிவித்தார்.



'அண்மைய உயர்நிலை சுற்றுப் பயணங்கள் மற்றும் இந்துசமுத்திரத்தின் நோக்கு' என்ற தலைப்பில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தை பலப்படுத்தும் முயற்சிகளின் போது, டிஜிட்டல் நிதியியல் மற்றும் எரிசக்தி பாதுகாப்பு தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தையும் சாகல ரத்நாயக்க வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, இராஜதந்திரிகள் மற்றும் கல்வியியலாளர்கள் கலந்துகொண்டனர்.

ஆசிய வலயத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் இலங்கையின் அமைவிட ரீதியான முக்கியத்துவம் தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மேலும் கருத்துத் தெரிவித்த சாகல ரத்நாயக்க,

06



கொழும்பிலுள்ள லிபிய தூதரகத்துக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று விஜயம் செய்து, லிபியாவில் வெள்ளப்பெருக்கினால் உயிரிழந்தவர்களுக்காக ஆறுதல் தெரிவித்துள்ளார். இந்த இக்கட்டான வேளையில் லிபிய மக்களுக்கு ஆதரவாக நிற்பதாக தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அங்கு வைக்கப்பட்டிருந்த இரங்கல் புத்தகத்திலும் கையெழுத்திட்டார்.

### சனல்–04 காணொளி தொடர்பில்

# சர்வதேச விசாரணைக்கு மைத்திரி கோரிக்கை



ஐக்கிய நாடுகள் சபையின் பிரேரணையின் படி சனல் 04 ஊடகம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை அம்பலப்படுத்தியமை தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட இணைப்பாளரை சந்திக்க தயாராகி வருவதாகவும் அவரிடம் கையளிப்பதற்கான கடிதம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக சனல் 04 வெளியிட்ட காணொளி தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று ஐ.நா. வலியுறுத்தியுள்ளது. ஐ.நா. இனால் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென்பதை வலியுறுத்துவதாகவும், அவர் தெரிவித்தார்.

தாக்குதல்களை தடுக்கத் தவறியதற்காக கடந்த நான்கு ஆண்டுகளாக தம்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தனக்கு நீதிமன்றங்களினால் தண்டனையும் விதிக்கப்பட்டதாகவும், அவர் தெரிவித்தார்.

"வீடியோவை பார்க்கும் ஒவ்வொருவரும் நடந்தது முற்றிலும் வேறுபட்டதென பார்ப்பார்கள். எனவே, இந்தக் காணொளி தொடர்பாக பொதுமக்களிடம் கருத்துகளை உருவாக்க தயாராகி வருகிறோம்" எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நீதிபதி இளஞ்செழியனின் தாயார் காலமானார்

**வவுனியா விசேட நிருபர்**



வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவசாகர் இளஞ்செழியனின் தாயார் சிவபாக்கியம் மாணிக்கவாசகர் நேற்று முன்தினம் (14) காலமானார்.

வேலணை கிழக்கு இரண்டாம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுநிலை அதிபரான சிவபாக்கியம் மாணிக்கவாசகர், ஓய்வுநிலைய ஆசிரியர் மாணிக்கவாசகரின் மனைவியும்

06

# மாகாண சபைகள், உள்ளூராட்சி சட்டங்கள் காலத்துக்கு ஏற்றவாறு மாற்றப்பட வேண்டும்

## பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவிப்பு



மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சட்டங்கள் காலத்துக்கு ஏற்றவாறு மாற வேண்டுமென, பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் (14) நடைபெற்ற போது அதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் மேலும் தெரிவித்த பிரதமர்,

"மேல்மாகாணத்தில் திண்மக்கழிவு முகாமைத்துவம் உரிய முறையில் மேற்கொள்ளப்படுவதில்லையென்று மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. குறிப்பாக, கம்பஹா மற்றும் கொழும்பு மாவட்டங்களில் அதிகளவு கழிவுகள் காணப்படுகின்றன. மேல் மாகாணத்தில் நிலவும் குப்பை பிரச்சினை பெருநகர திட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளது. மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்து விழுந்தது. இன்னும் குப்பை முகாமைத்துவத்துக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. திடீர் வெள்ளம் ஏற்பட்டால் கொழும்பு மாவட்டமே நீரில் மூழ்கும். கம்பஹா நீரில் மூழ்கும். இவ்வாறான விடயங்களை பொதுமக்கள் தரப்பிலிருந்து சிந்தியுங்கள்.

பல வருடங்களாக இருந்துவரும் ஊழியர்களை நிரந்தரமாக்கும் பிரச்சினைக்கு எதிர்வரும் வரவு செலவுத்திட்டத்தில் தீர்வு காண முயற்சித்து வருகிறோம். இது தொடர்பான முன்னுரிமை

06

# நல்லூர் ஆலயத்தில் சாகல வழிபாடு





யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய தேர்த் திருவிழாவில் கலந்துகொண்டார். நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவ தேர்த் திருவிழா கடந்த புதன்கிழமை (13) காலை விசேட பூஜைகளுடன் ஆரம்பாகி நடைபெற்றது. தேர், திருவீதி உலா வருவதை பார்வையிட்ட சாகல ரத்நாயக்க, நல்லூர் ஆலயத்தில் நடைபெற்ற பூஜை வழிபாடுகளிலும் கலந்துகொண்டார். இதன் பின்னர், ஆதீனத்தில் இந்துமத தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடினார். நல்லூர்க் கந்தசுவாமி ஆலய தேர்த் திருவிழாவில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உட்பட பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

# மதவாச்சி பிரதேசத்தில் 25 வயது இளைஞன் அடித்துக் கொலை




**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

மதவாச்சி, கனந்தராதிவுள்வெவ பிரதேசத்திலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் (14) இரவு 25 வயதுடைய இளைஞர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டதுடன், இந்தச் சம்பவம் தொடர்பாக கொல்லப்பட்ட இளைஞரின் தந்தையும் மூத்த சகோதரனும் சந்தேகநபர்களாக பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

06



கிழக்கு மாகாணக் கடற்படை அதிகாரியாக ரியர் அட்மிரல் சுரேஷ் டி சில்வா பொறுப்பேற்ற பின்னர், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் மரியாதை நிமித்தம் சந்தித்துக்கொண்டார். இதன்போது, ஆளுநருக்கு நினைவுப்பரிசையும் வழங்கி சுமுகமாக அவர் கலந்துரையாடினார்.

# துறைமுக நகரிலுள்ள உணவுக் கூடங்கள் 2027 மார்ச் அகற்றப்படும்

## பொருளாதார ஆணைக்குழு நிதிக்குழு தெரிவிப்பு



கொழும்புத்துறைமுக நகரிலுள்ள உணவுக்கூடங்கள் எதிர்வரும் 2027 மார்ச் அகற்றப்படுமென, கொழும்புத்துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் அரசாங்க நிதி தொடர்பான குழுவிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

வெளிநாட்டை குறிப்பாக இலக்கு வைத்து வடிவமைக்கப்பட்டுள்ள கொழும்புத்துறைமுக நகரத்தில் இது போன்ற உணவுக்கூடங்கள் அமைக்கப்பட்டிருப்பதன் சட்ட ஏற்பாடுகள் தொடர்பாக அரசாங்க நிதி பற்றிய குழு வினவியமைக்கு பதிலளிக்கும் வகையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ.த. சில்வா தலைமையில் கடந்த செவ்வாய் (12) கூடியபோது இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது. இதில் எதிர்வரும் 19ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க

06

### பால் உற்பத்தியில் தன்னிறைவு காண

# 2028வரை ஐந்தாண்டு திட்டம் தயார்



பால் உற்பத்தியில் நாட்டை தன்னிறைவு அடையச் செய்வதற்காக குறுகிய மற்றும் நீண்டகாலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இதற்கமைய 2023 முதல் 2028வரை ஐந்தாண்டுத் திட்டமொன்று தேசிய பால் உற்பத்திக் கொள்கையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதாக, கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பால் பண்ணைகளை முகாமைத்துவம் செய்வதனூடாக உற்பத்தித் திறனை மேம்படுத்தல், புற்தரைகளை பாதுகாத்தல் மற்றும் அதிக போசாக்குள்ள புல் வகைகளை பயிரிடுதல் போன்ற பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

06

### நிதி மோசடி, பயங்கரவாத செயற்பாடுகள்

# நிதி அளித்தலுக்கு எதிரான சட்ட கட்டமைப்பு குறித்து அரசு அவதானம்

எதிர்வரும் 2025ஆம் ஆண்டுக்கு முன்பாக இலங்கையில் நிதி மோசடி மற்றும் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு நிதி அளித்தலுக்கு எதிரான சட்டக் கட்டமைப்பு தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அதற்காக இலங்கையின் நிதிக் குற்றப் புலனாய்வு பிரிவினரால் விடுக்கப்பட்ட அழைப்புக்கிணங்க, நிதி மோசடி தொடர்பான ஆசிய பசுபிக் அமைப்பின் உயர்மட்டக் குழுவொன்று அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தது.

நிதி மோசடி தொடர்பான ஆசிய பசுபிக் குழுவின் இணைத்தலைவரும் கனடாவின் ஒட்டாவா, நிதித்துறை மற்றும் நிதிக் கொள்கைப் பிரிவின் பிரதியமைச்சருமான ஜூலியன் ப்ராகூ, நிறைவேற்றுச் செயலாளர் கார்டன் ஹூக், அந்நியோன்ய மதிப்பீட்டுப் பணிப்பாளர் டேவிட் ஷானன் உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினரும் இந்த விஜயத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

நிதி மோசடி மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதி அளித்தலுக்கு எதிரான (AML/CFT) கட்டமைப்பு பற்றிய முக்கியமான புரிதலை இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கும் நோக்கிலேயே இந்தக் குழுவின் விஜயம் அமைந்திருந்தது.

நிதி நடவடிக்கைச் செயலணியின் (FATF) கீழுள்ள ஒரு பிராந்திய மேற்பார்வை அமைப்பான ஆசிய பசுபிக்குழு, நிதி மோசடி (ML), பயங்கரவாதத்துக்கு நிதி அளித்தல் (TF) மற்றும் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் மற்றும் அது தொடர்பான வேலைத் திட்டங்களுக்கு (PFWMD)

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 218.30 | 229.86 |
| கனடியன் டொலர் | 243.55 | 256.14 |
| யூரோ | 357.10 | 374.17 |
| ஜப்பான் யென் | 2.3040 | 2.4114 |
| சிங்கப்பூர் டொலர் | 242.85 | 255.04 |
| ஸ்ட்ரேலிங் பவுன் | 417.90 | 436.25 |
| சுவிஸ் பிராங்க் | 372.53 | 393.13 |
| அமெரிக்க டொலர் | 322.84 | 335.89 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 873.71 | கட்டார் ரியால் | 90.39 |
| குவைத் டினார் | 1073.32 | சவூதி ரியால் | 87.82 |
| ஓமான் ரியால் | 855.52 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 89.67 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 31ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஸபர் பிறை 30

## குறள் தரும் சிந்தனை



அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்

தம்முடன் பழகியவர்கள் தமக்கே எதிராக அழிவுதரும் காரியத்தைச் செய்தாலும்கூட, அன்பின் அடிப்படையில் நட்புக் கொண்டவர் அதற்காக அந்த அன்பை விலக்கிக் கொள்ள மாட்டார்.

# இளவயது மரணங்களுக்கு தவறான உணவுப்பழக்கம்தான் காரணமா?

நாட்டில் இளவயதினர் மத்தியில் திடீர் மரணங்கள் சமீப காலமாக அதிகரித்திருப்பதாக தெரியவந்திருக்கின்றது. அதிகமான திடீர் மரணங்களுக்கு மாரடைப்பே காரணமாக அமைந்திருக்கின்றது. மரணமடைந்தவர்களில் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அவர்களைப் பார்க்கிலும் வயதில் குறைந்தவர்கள் பலரும் உள்ளனர்.

முன்னைய காலத்தில் மாரடைப்பு என்பது நடுத்தர வயதைக் கடந்தவர்கள் மாத்திரமே எதிர்நோக்குகின்ற பாரதூரமான வியாதியாக இருந்து வந்தது. மாரடைப்பு மரணங்களும் ஐம்பது வயதைக் கடந்தவர்கள் மத்தியிலேயே பெரும்பாலும் இருந்தது. ஆனால் தற்போது நிலைமை அவ்வாறானதாக இல்லை.

இருபத்தைந்து வயதுப் பருவத்திலேயே இளவயதினர் பலர் மாரடைப்பு வியாதிக்கு உள்ளாகுவதை அறியமுடிகின்றது. மாரடைப்பு காரணமாக இளவயதினர் பலர் திடீரென மரணமடைவதையும் அறிகின்றோம். கடந்த ஒருவருட காலத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் மாரடைப்பினால் திடீரென மரணமடைந்துள்ளனர். மரணமடைந்தவர்களில் அநேகமானோர் ஆண்கள் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ்வாறான இளவயது மரணங்கள் பரிதாபமான சம்பவமாகவே பார்க்கப்படுகின்றன.

இளவயதினர் மத்தியில் மாரடைப்பு மரணங்கள் அதிகரித்து வருவதற்கு பலரும் பலவிதமான காரணங்களைக் கூறுகின்றனர். இலங்கையில் மூன்றுவருட காலத்துக்கு முன்னர் உருவெடுத்த கொவிட் தொற்று இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று மக்கள் மத்தியில் பேச்சுகள் உலவுகின்றன. ஆனால் அதற்கான சான்றுகளை மருத்துவ நிபுணர்கள் இதுவரை முன்வைக்கவில்லை. 'காகம் இருக்கப் பனம்பழம் விழுந்ததைப் போல' என்ற உவமையைத்தான் இதற்குக் கூற முடியும்.

விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்காமல் எதையுமே உறுதியாகக் கூறிவிட முடியாது. மக்கள் மத்தியில் ஊகங்கள் நிலவுவதை ஆதாரமாக வைத்துக் கொண்டு உடனடியாக முடிவுக்கு வந்துவிடவும் முடியாது. உலகெங்கும் ஏராளமான நாடுகளில் கொவிட் தொற்று ஏற்பட்டு மில்லியன்கணக்கான மக்கள் உயிரிழந்தது எமக்கெல்லாம் தெரிந்த விடயமாகும். அவ்வாறிருக்கையில், எமது நாட்டில் மாத்திரம் இளவயது மரணங்கள் அதிகரித்திருப்பதற்கு காரணம் என்ன என்பதைத்தான் முதலில் ஆராய்வது முக்கியம்.

இந்த மரணங்கள் தொடர்பாக சிலர் வேறு விதமாகக் கூறுகின்றார்கள். கொவிட் தொற்றில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக மக்கள் ஏற்றிக் கொண்ட தடுப்பூசியே இதற்கெல்லாம் காரணமென்பது அவர்களது வாதம். கொவிட் தடுப்பூசியே மாரடைப்பை ஏற்படுத்துவதாக அவர்கள் தங்களுக்குள் ஊகித்துக் கொள்கின்றார்கள். மக்களில் பலர் கொவிட் தடுப்பூசி குறித்து ஆரம்பத்திலேயே பலவிதமான அச்சமூட்டும் நம்பிக்கைகளை தங்களுக்குள் கொண்டிருந்தமை இப்போது எமக்கு நினைவுக்கு வருகின்றது. கொவிட் தடுப்பூசியானது குழந்தைப்பேற்றை தடுத்து விடுமென்பதும் அவ்வாறான ஆதாரமற்ற கதைகளில் ஒன்றாகும்.

இவ்வாறு பலரும் பலவிதமான ஊகங்களைக் கூறுகின்ற போதிலும், இளவயது மாரடைப்புக்கான சரியான காரணத்தை இதுவரை கண்டுபிடிக்க முடியாமலேயே உள்ளது. ஆனால் மருத்துவ நிபுணர்கள் ஒன்றை மட்டும் உறுதியாகக் கூறுகின்றனர்.

இருதயக் குழாய்களில் ஏற்படுகின்ற அடைப்புதான் மாரடைப்புக்கான பிரதான காரணமாகின்றது. மாரடைப்புக்குள்ளான இளவயதினரில் அனைவருக்கும் குருதியில் கொழுப்பின் அளவு அதிகமாகவே உள்ளது. அதுமாத்திரமன்றி, இளவயதினர் பலர் தங்களுக்கு குருதிக் கொழுப்பு அல்லது இரத்தசீனியின் அளவு அதிகமாக உள்ளதென்பதை அறிந்து கொள்ளாதவர்களாகவே உள்ளனர் என்கின்றனர் மருத்துவ நிபுணர்கள்.

இலங்கையர்கள் கொழுப்புணவுகளை அதிகளவில் உணவில் எடுத்துக் கொள்வது வேகமாக அதிகரித்து வருவதாக மருத்துவ நிபுணர்கள் எப்போதும் எச்சரித்தபடியே வருகின்றனர். இளவயதினர்களில் பெரும்பாலானோர் தங்களது வீட்டில் சமைக்கப்படுகின்ற உணவுகளில் இப்போது நாட்டம் கொள்வதில்லை. வீட்டில் அவர்களது தாய்மார் சமைக்கின்ற போதிலும் கூட, ஹோட்டல் உணவுகளிலேயே அவர்கள் நாட்டம் கொள்கின்றனர்.

வாலிபர்கள் பலரிடம் இப்பழக்கம் வேகமாக அதிகரித்து வருவதைக் காண முடிகின்றது. கொத்து, பீற்ஸா, டொல்பின், பேகர் என்றெல்லாம் விதம்விதமான உணவுகள் இன்று உணவுக்கடைகளில் தாராளமாகக் கிடைக்கின்றன. இரவு வேளைகளில் உணவுக்கடைகளில் இளவயதினர்கள் அதற்காக அலைமோதுவதைக் காண முடிகின்றது.

இந்த விரைவுணவுகள் தொடர்பாக மருத்துவ உலகில் அச்சம் தரும் தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்ற போதிலும், இளவயதினர் அதுபற்றியெல்லாம் கவனம் கொள்வதில்லை. உணவுக்கு சுவை மாத்திரமே பிரதானமென்று அவர்கள் எண்ணுகின்றனர்.

இந்த விரைவுணவுகளில் அடங்கியுள்ள எண்ணெயின் அளவு மிகவும் அதிகமாகும். கொத்துரொட்டி ஒன்றைத் தயாரிக்கும் போது அதனுள் ஊற்றப்படுகின்ற எண்ணெயைப் பார்த்தால் அது புரிந்து விடும். அத்தனை எண்ணெயும் எமது இரத்தத்துடன் கலந்து இழைக்கப் போகின்ற தீங்கைப் பற்றி பலர் புரிந்து கொள்வதில்லை.

எண்ணெய், உப்பு, இனிப்பு என்பதெல்லாம் அளவோடு அமைந்தால்தான் உணவு ஆரோக்கியமாக இருக்கும். அளவுமீறினால் உயிராபத்துத்தான் என்பதை நாம் மறந்துவிடலாகாது!

editor.tkn@lakehouse.lk

# யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நான்காவது திறன் வகுப்பறை திறப்புவைப்பு

யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் கடந்த வாரம் நான்காவது திறன் வகுப்பறை திறந்து வைக்கப்பட்டது. பாடசாலையின் அதிபர் பா.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில், வித்தியாலயத்தின் பழைய மாணவர் ந. சண்முகதாஸ் (லண்டன்) அவர்களின் நிதி உதவியின் கீழ் தனது பெற்றோராகிய அமரர்கள் திரு. திருமதி நவரட்ணம் பொன்னம்மா ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட நான்காவது நவீன திறன் வகுப்பறையானது பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த வலிகாமம் வல்வி வலயத்தின் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. மதியழகன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இத்திறன் வகுப்பறையின் திறன்பலகையை சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்த பாடசாலையின் முன்னாள் அதிபர் திருமதி ச. சிவமலர் திரைநீக்கம் செய்து வைத்ததோடு திறன்பலகையை பாடசாலையின் அதிபர். பா. பாலசுப்பிரமணியம் வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.







இங்கு கருத்துத் தெரிவித்த பிரதிக்கல்விப் பணிப்பாளர், இப்பாடசாலை விளையாட்டுத் துறையிலும் கல்வித் துறையிலும் மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பல்வேறு சாதனைகளை பெற்று வருகின்ற இந்நேரத்தில், இத்திறன் வகுப்பறை அமையப் பெற்றமையானது மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு மேலும் உந்துசக்தியாக அமைந்திருக்கின்றது எனக் கூறினார்.

அத்துடன் வித்தியாலய அதிபர் தனது தலைமையுரையில், இப்பாடசாலையில் உள்ள அனைத்து மாணவர்களும் நவீனமயப்படுத்தப்பட்ட கல்வி வாய்ப்புக்களை பெறவேண்டும் என்று கூறியதுடன், இச்செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கிய பழைய மாணவர்கள் உள்ளிட்ட பாடசாலைச் சமூகத்திற்கும் கல்வி அதிகாரிகளுக்கும் நன்றி கூறினார்.

இந்நிகழ்வில் அயல் பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கல்முனை பிரதேச சுகாதார நிறுவனங்களில் பணியாற்றும் அலுவலர்களுக்கு செயலமர்வு

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குட்பட்ட சுகாதார நிறுவனங்களில் கடமை புரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கான தாபன விதிக்கோவை தொடர்பான வலுவூட்டல் செயலமர்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.







கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் வழிகாட்டல் மற்றும் ஆலோசனையின் கீழ் இடம்பெற்ற இந்நிகழ்வு பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி எம்.எஸ்.வீ.வஜிதா அவர்களின் ஒருங்கிணைப்பில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எம்.பீ.அப்துல் வாஜித் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எம்.பீ.அப்துல் வாஜித், பொத்துவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எம்.ராமகுட்டி, நிர்வாக உத்தியோகத்தர் திருமதி எம்.எஸ்.வீ.வஜிதா ஆகியோர் விரிவுரை நிகழ்த்தினர்.

சுகாதார நிறுவனங்களில் பணியாற்றுகின்ற குறித்த உத்தியோகத்தர்கள் அவசியம் தெரிந்திருக்க வேண்டிய நிர்வாக நடைமுறைகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள், சுகாதாரத் துறைக்கு ஆற்றவேண்டிய பணிகள் தொடர்பாகவும் வளவாளர்களினால் இந்நிகழ்வின்போது விரிவுரை நிகழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கல்முனை பிராந்தியத்தில் உள்ள வைத்தியசாலைகள், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்கள் உள்ளிட்ட சுகாதார நிறுவங்களில் கடமையாற்றுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் இந்நிகழ்வின் போது கலந்துரையாடப்பட்டது.

**ஆதம்லெவ்வை றியாஸ்...**
(பாலமுனை விசேட நிருபர்)

# தேசிய சாகித்திய விழாவில் சாகித்தியரத்னா விருது பெறும் எழுத்தாளர் க. சட்டநாதன்

எழுத்தாளர் க. சட்டநாதனுக்கு இலங்கை அரசின் சாகித்திய ரத்னா விருது கிடைத்துள்ளது. எமது நீண்ட கால இலக்கிய நண்பர் க. சட்டநாதனுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்களை இச்சந்தர்ப்பத்தில் தெரிவிக்கின்றோம்.

வட இலங்கையில் வேலணையில் பிறந்திருக்கும் சட்டநாதன் அந்தத் தீவுப்பகுதியைச் சேர்ந்த எழுத்தாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்களுடனும் நெருக்கமான உறவைப் பேணி வளர்த்தவர்.

வேலணையில் மறுமலர்ச்சிக்கழகம், தீவுப்பகுதி எழுத்தாளர் சங்கம் முதலானவற்றிலும் அறுபதுகளில் சட்டநாதன் இணைந்திருந்த காலத்திலேயே தரமான இலக்கிய ரசனை மிக்கவராகவே திகழ்ந்திருந்திருப்பதாக பேராசிரியர் சிவச்சந்திரன் பதிவுசெய்துள்ளார்.

“எனது கதைகள் பற்றி நானே ஏதாவது சொல்லவேண்டும் போலிருக்கிறது. விஸ்தாரமாக அல்ல, சுருக்கமாக. எந்தப்புற நிகழ்வுகளுமே என்னைப்பாதிக்கிறது. மனதைத் தொட்டு நெருடுகிறது. சில சமயங்களில் காயப்படுத்துகிறது. இந்த அனுபவங்களையெல்லாம் சிறைப்பிடிக்கும் எத்தனம்தான் எனது கதைகள். இறுக்கமான குடும்ப உறவுகளில் ஆணின் அதிகாரமுனை மழுங்க, பெண் தன்னைச்சுற்றிப்பிணைந்து கிடக்கும் தளைகளைத் தகர்த்து, விட்டு விடுதலையாவது எனது கதைகளில் இயல்பாகவே சாத்தியமாகிறது”.

இவ்வாறு தனது முதலாவது கதைத்தொகுப்பான ‘மாற்றம்’ நூலில் சொல்லும் சட்டநாதன், இதுவரையில் எழுதியிருக்கும் அனைத்துக் கதைகளிலும் மனிதநேயம் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

இவருடைய படைப்புமொழி எந்தச் சிக்கல்களும் அற்ற எளிமையானது. அதனால் எத்தகைய வாசகர்களுக்கும் இலகுவில் நெருக்கமாகிவிடும். இலக்கிய வட்டாரத்தில் சிறுகதை இலக்கியம் பற்றிய பேச்சு வந்தால், அங்கு சட்டநாதனின் பெயர் தவிர்க்க முடியாததாயிருக்கும்.

சட்டநாதனின் படைப்பாளுமைப்பண்பு பற்றி தமிழகத்தில் ஜெயமோகன், வெங்கட் சாமிநாதன் உட்பட, அருண்மொழிவர்மன், தி. செல்வமனோகரன், ஜீவநதி பரணீதரன், இரா. சிவச்சந்திரன், குப்பிழான் ஐ. சண்முகன், கலாநிதி நா. சுப்பிரமணியன், பேராசிரியர் சிவசேகரம், சி. கருணாகரன், ஏ.ஜே. கனகரத்னா, மதுசூதனன் முதலானோர் விதந்து எழுதியுள்ளனர்.

எனினும், பெண்களின் உணர்வுகளுக்கும் உரிமைகளுக்காகவும் எழுதிவரும் சட்டநாதனின் படைப்புலகம் பற்றி நானறிந்தவரையில் பெண்ணியவாதம் பேசும் பெண்கள் இதுவரையில் எழுதவில்லை என்பது எனது நெருடலான அவதானம்!

தமிழ் கதைஞர் வட்டத்தின் (தகவம்) பரிசில்களை சட்டநாதனின் பல கதைகள் பெற்றுள்ளன. சட்டநாதனின் இரண்டாவது சிறுகதைத்தொகுப்பு ‘உலா’ (1992) யாழ். இலக்கியவட்டம், அகில இலங்கை சுதந்திர இலக்கிய அமைப்பு ஆகியனவற்றின் விருதுகளையும் வட – கிழக்கு மாகாண சாகித்திய விருது, இலங்கை தேசிய சாகித்திய விருது முதலானவற்றையும் பெற்றுள்ளது.



1970 இல் இவரது முதல் சிறுகதை ‘நாணயம்’ வீரகேசரி வாரவெளியீட்டில் வந்திருப்பதாக அறியப்பட்டாலும், நான் முதலில் படித்த அவரது கதை பூரணியில் 1972 இல் வெளியானது. இவரது சில கதைகள் ஆங்கிலத்திலும் மொழிமாற்றம் செய்யப்பட்டு வெளிநாட்டு இதழ்கள் – நூல்களிலும் ( Journal of South Asian Literature – The Penguin New writing in Srilanka) வந்துள்ளன.



மல்லிகையில் சட்டநாதன் எழுதியிருந்த உறவுகள் சிறுகதை, அது வெளிவந்த காலப் பகுதியில் இலக்கிய உலகில் அதிர்வுகளை ஏற்படுத்தியிருந்தது.

சட்டநாதன், ஆண் – பெண் உறவுகளை துல்லியமாக இனம் கண்டு எழுதிவரும் அதேசமயம், உளவியல் பாங்கிலும் பாத்திரங்களை படைப்பவர். ஒரு பாடசாலை மாணவனின் எண்ணச்சுழற்சியையும் அதன் அடிப்படையில் வரும் மன அழுத்தத்தையும் (Obsessive Compulsive disorder) அழகாக சித்திரித்து அழுத்தம் என்ற சிறுகதையை எழுதியவர்.

சட்டநாதன், சிறுகதைகளை எழுதத் தொடங்கிய காலம் முதல், ஜீவநதியில் தொடர்நாவல் எழுதும் காலம் வரையில் சித்திரித்த பாத்திரங்களும் அவர்களை நடமாடவிட்டு வாசகரை அழைத்துச்செல்லும் ஊர்களும் மனதை விட்டு அகலாது.

முக்கியமாக பெண்களும் , குழந்தைகளும், அவரது கதைகளில் வரும் ஊர்களும் வீதிகளும் ஏன், மரம் செடி கொடிகளும் காய் , கனிகளும் பறவையினங்களும் எமது வாசிப்பு அனுபவத்தில் உடன் வந்துகொண்டிருக்கும்.

சட்டநாதன் ஆங்கில ஆசிரியராக பணியாற்றியவர். இலங்கை ஆசிரியர் சங்கத்தில் அங்கம் வகித்தவர். 1970 களில் இச்சங்கம் நடத்திய வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டமையால் தனது வேலையையும் இழந்திருந்தார்.

அவர் ஆங்கிலப்பட பிரியர். திரைப்பட விழாக்களை தவறவிடமாட்டார்.

அவுஸ்திரேலியாவுக்கு நான் வந்தபின்னர், இலங்கை செல்லும் சந்தர்ப்பங்களில் அவரை சந்திக்கநேர்ந்தால், அவரை சந்தித்து நட்புடன் உரையாடுவேன். அவரது அன்புத்துணைவியார் மறைந்த செய்தியறிந்ததும் தொலைபேசியில் தொடர்புகொண்டு ஆறுதல் சொன்னேன்.

அவருக்கு குழந்தைகள் இல்லை. இன்று மனைவியும் நினைவாகிப்போனார். எனினும், அவர் சிருஷ்டித்த குழந்தைகளும் மனைவிமாரும் அநேகம்! அவர் உளமாற நேசித்த மனைவியும் சமூகத்தின் குழந்தைகளும் சகோதர சகோதரிகளும் நண்பர்களும் அவரது கதைகளில் ஏதோ ஒரு உருவத்தில் வந்துகொண்டிருப்பார்கள்! வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்!

அவர் தனது நூல்களை குடும்ப அங்கத்தவர்களுக்கே சமர்ப்பணம் செய்தவர். இலங்கையில் மல்லிகை, ஞானம், ஜீவநதி ஆகியன சட்டநாதனை அட்டைப்பட அதிதியாக பாராட்டி கௌரவித்துள்ளன. ஜீவநதி சிறப்பிதழே வெளியிட்டுள்ளது.

இலக்கிய உலகில் கொண்டாடப்பட வேண்டியவரான சட்டநாதனின் படைப்புலகம், பாத்திர வார்ப்புகள், கதைசொல்லும் உத்தி பற்றியெல்லாம் வாசகர் மட்டத்தில் அனுபவப்பகிர்வுகளை எதிர்காலத்தில் நடத்தவேண்டும், அவர் குறித்து ஆவணப்படம் தயாரிக்கவேண்டும் முதலான வேண்டுகோள்களையும் இந்தப்பதிவின் ஊடாக முன்வைக்கின்றேன்.

**லெ. முருகபூபதி...**

# வர்த்தகத்தில் சீனாவை சார்ந்திருப்பதை குறைப்பதற்கு திட்டமிடும் ரஷ்யா!

ஜி20 கூட்டத்தில் ரஷ்யா உக்ரைன் போரை உலக நாடுகள் மத்தியில் இந்தியா கையாண்ட விதம் பலருக்கும் வியப்பு அளித்தது மட்டும் அல்லாமல் ரஷ்யாவுடனான உறவு தேவை என்பதையும் மறைமுகமாக காட்டியுள்ளது. இந்த நிலையில் ரஷ்யா தொடர்பாக 2 விஷயங்கள் நடந்துள்ளன.

ரஷ்யா அரசு சைபீரிய பகுதியில் இருக்கும் தொழிற்சாலைகளுக்கு போதுமான உற்பத்தி பொருட்களின் விநியோகத்தை வழங்குவதற்காக கடந்த சில மாதங்களில் இந்தியாவில் இருந்து அலுமினிய உலோகத்தின் தாதுக்களான அலுமினாவை இறக்குமதி செய்வதை தொடங்கியுள்ளது.

உலக நாடுகள் விதித்துள்ள தடையைத் தாண்டி வர்த்தகம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் ரஷ்யா, தனது நாட்டுக்கான விநியோகத்தை நிலையானதாகவும், மேம்படுத்தப்படவும் பல நாடுகளில் இருந்து மேம்படுத்த திட்டமிட்டமிட்டுள்ளது.

இதனால் சீனாவை மட்டுமே சார்ந்திருப்பதைக் குறைக்க முடிவு செய்துள்ளது ரஷ்யா.



ரஷ்ய உக்ரைன் போர் காரணமாக சர்வதேச வர்த்தகத் தொடர்புகள் அனைத்தும் ரஷ்யாவுக்கு மூடப்பட்டன. எனவே இந்தியாவுடன் வர்த்தகத் தொடர்புகளை அதிகரிக்க ரஷ்யா ஆர்வம் காட்டி வருகின்றது.

# அறுகம்குடா பிரதேசத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய தீர்மானங்கள் நிறைவேற்றம்

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம ஒருங்கிணைப்பிலும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களான பாராளுமன்ற உறுப்பினர்களான டபிள்யூ. வீரசிங்க, ஏ.எல்.எம். அதாஉல்லா, ஆகியோரின் இணைத் தலைமையிலும் இக்கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.எம்.எம்.முஷாரப், விமலவீர திஸாநாயக்க, திலக் ராஜபக்ஷ, கலையரசன் மற்றும் மாவட்டத்திலுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், பாதுகாப்பு உயர் அதிகாரிகள், கல்வி அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் அறுகம்குடா பிரதேசத்தில் சுற்றுலாத்துறை கைத்தொழில் துறையின் முன்னேற்றத்தின் பொருட்டு நீண்டகால குத்தகை அடைப்படையில் உட்துறை பத்திரதாரர்களுக்கு வழங்க பொத்துவில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அந்தத் தீர்மானத்தை இடைநிறுத்துமாறு கோரி கரையோரம் பேணல் திணைக்களம் இக்கூட்டத்தில் முன்மொழிவினைச் சமர்ப்பித்திருந்தது.

இதன்போது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் திலக் ராஜபக்ஷ "இம்முன்மொழிவு சூழலுக்கு அவசியமானது. காடுகள் அழிக்கப்படக் கூடாது" என பல காரணங்களைக் கூறியதுடன் இந்த இடங்களை வன இலாகாவுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பொத்துவில் பிரதேச செயலகம் திருடர்கள் நிறைந்த இடம் எனவும், அங்கு சட்டவிரோ பேர்மிட் வழங்குவது கூடுதலாக இடம்பெறுவதாகவும் குற்றச்சாட்டுக்களை அவர் சொல்லிக்கொண்டிருந்த போது குறுக்கிட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப்,

"பொத்துவில் சட்டவிரோக பேர்மிட் என்று சொல்வதை நீங்கள் முதலில் நிறுத்திக் கொள்ள வேண்டும்" என்றார்.

அறுகம்குடா என்பது சுற்றுலாத்துறையின் இதயமாகும். அந்தப் பிரதேசத்திலே சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக பல முன்னடுப்புகள் எடுக்கப்பட்டுள்ளன.

பொத்துவில் இறத்தல்குளத்தை 200 மில்லியன் ரூபாய் நிதியில் அபிவிருத்தி செய்வதற்கான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டதுடன் அது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. இதன் மூலம் பொத்துவில், லகுகல, சாகாமம் போன்ற பகுதிகளுக்கு குடிநீர் வசதியுடன் விவசாய செய்கைக்கும் நீர் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவில் பொதுவிளையாட்டு மைதானம் இல்லாமல் விளையாட்டு வீரர்கள் பெரும் கஷ்டப்படுகின்றனர். வட்டிவெளி எனும் இடத்தில் உள்ள காணி சுவீகரிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் இங்கு கொண்டுவரப்பட்டபோது அது தொடர்பில் கலையரசன் எம்.பி.யும் பேசினார். இன முறுகல் ஏற்படாத வகையில் இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று கூறினார். உண்மையாகவே நானும் அதனையே விரும்புகின்றேன். இதற்காகத்தான் பல மாதங்களாக பேசினோம் என்று முஷாரப் எம்.பி தெரிவித்தார்.




இங்கு பொதுவிளையாட்டு மைதானம் அமைப்பதற்கான இடமாக வட்டிவெளி எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன். இதற்குரிய ஆவணங்களை பரிசீலித்து சரியான தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காக குழுவொன்றும் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் முன்னேற்ற மீளாய்வு செய்யப்பட்டதுடன் மாட்ட ஒருங்கிணைப்புக் குழவின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கான முன்மொழிவுகள்குறித்தும்கலந்துரையாடப்பட்டது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள கரையோரப் பிரதேசங்கள் மற்றும் தாழ் நிலங்களில் சட்டவிரோத நிர்மாணிப்பு பணிகளை குறைப்பதற்கு ட்ரோன் தொழில் நுட்பத்தை பயன்பத்தி வரைபடம் வரைந்து அதற்கமைய நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றி அனுமதி வழங்கப்பட்டது.

ஒலுவில் துறைமுகத்தில் குவிக்கப்பட்டுள்ள மண்ணை அனர்த்த அபாயத்தைக் குறைக்கும் பொருட்டு வெள்ளத்தினால் பாதிக்கப்படும் கரையோரப் பாடசாலைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு ஒலுவில் தொடக்கம் சாய்ந்தமருது வரையான பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடலரிப்பைத் தடுப்பதற்கு தேவையான திட்ட முன்மொழிவுகளை தயாரித்து அதனை தேசிய அணர்த்த ஒருங்கிணைப்புக் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டுமென தீர்மானம் எடுக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் காட்டு யானைகளின் பாதிப்பினை குறைப்பதற்கு வனவிலங்கு திணைக்களத்தின் ஊடாக GPS COLLAR போடுவதற்கும், மக்களை அறிவுறுத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.



**எஸ்.எம்.அறூஸ்...**
(அட்டாளைச்சேனை விசேட நிருபர்)

---

# நிலவு, சூரியன் ஆய்வுகளையடுத்து ஆழ்கடலுக்குள் இறங்கும் இந்தியா!

## சந்திரயான், ஆதித்யா திட்டங்களையடுத்து ஆறு கி.மீ ஆழக்கடலுக்குள் மனிதர்களுடன் பயணம் செய்யும் நீர்மூழ்கி வாகனம் தமிழகத்தில் தயாராகின்றது!



நிலவின் தென்துருவத்தில் ஒரு வெற்றிகரமான 'மென்மையான தரையிறக்கத்தை' அடைந்த பிறகு, சூரியனை ஆய்வு செய்வதற்காக ஆதித்யா 1 என்ற விண்கலத்தை அனுப்பியிருந்தது இந்திய விண்வெளி ஆய்வு நிலையமான இஸ்ரோ.

விண்வெளி ஆய்வுடன் மாத்திரம் இந்தியா நின்றுவிடவில்லை. கடலின் ஆழத்தில் உள்ள இதுவரை அறியப்படாத மர்மங்களைக் கண்டுபிடிப்பதிலும் இந்திய விஞ்ஞானிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். நிலவின் ஆய்வு போன்று கடலின் ஆய்வும் பரபரப்பும் புதுமையும் நிறைந்ததாகும்.

இந்தியா இப்போது ஆழ்கடல் ஆய்வு மற்றும் பல்லுயிர் மதிப்பீடுகளுக்காக கடலுக்குள் 6 கி.மீ ஆழத்திற்கு மூன்று மனிதர்களை ஏற்றி செல்லும் 'மத்ஸ்யா 6000' எனும் நீர்மூழ்கிக் கப்பலை தயாரித்து வருகிறது. இதன் மூலம் உலக நாடுகளின் கவனம் இந்தியாவின் மேல் திரும்பியுள்ளது. அறிவியல்துறையில் இந்தியாவின் அதீதத்திறமைகள் குறித்து உலகமே ஆச்சரியத்தில் மூழ்கியுள்ளது.


இந்திய மத்திய அமைச்சரான கிரண் ரிஜிஜு, ஆளில்லா நீர்மூழ்கிக் கப்பல் மத்ஸ்யா 6000 இன் வீடியோ மற்றும் படங்களை ட்வீட் செய்திருந்தார். அப்போதிலிருந்து மத்ஸ்யா 6000 இன் படங்கள் சமூக வலைத்தளத்தில் அதிக அளவு பகிரப்பட்டு வருகின்றன. இது கடலின் ஆழத்தை ஆராயும் 'சமுத்ராயன்' திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

சென்னையில் உள்ள நெஷனல் இன்ஸ்டிடியூட் ஒப் ஒஷன் டெக்னோலொஜி (NIOT) கப்பலை உருவாக்கி வருகிறது. நவீன தொழில்நுட்பத்துடன் கடினமாக உருவாக்கப்படும் மத்ஸ்யா 6000 வெற்றிகரமாக கடலுக்குள் செல்லும் என்று நம்பப்படுகின்றது.

இந்த வாகனம் 2.1 மீட்டர் விட்டம் மற்றும் 600 பார் அழுத்தத்தைத் தாங்கக்கூடிய 80 மி.மீ தடிப்பு கொண்ட டைட்டானியம் அலாய் ஸ்பியர் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆழ்கடல் பயணத்தின் ஒரு பகுதியாக, அரிய கனிமங்களுக்காக ஆழ்கடல்களை ஆராய்வதற்காக இந்தியக் குழுவின் ஆழமான நீரில் மூழ்கும் வாகனமான மத்ஸ்யா 6000 பயன்படுத்தப்படும்.

இந்தியாவின் முதன் முதல் கடல் ஆய்வு பயணம் இதுவாகும். இந்தியாவின் முதல் மனித கடல் ஆய்வுப் பணியாக இது இருக்கும். உண்மையில், நீருக்கு அடியில் 6,000 மீற்றர் வரை கோள வாகனத்தில் மனிதர்களால் பயணிக்க முடியும். இருப்பினும் நீருக்கடியில் உல்லாசப் பயணம் 500 மீட்டர் நீளம் மட்டுமே இருக்கும். அதற்கு கீழே ஆய்வுகளுக்காக மட்டுமே மனிதர்கள் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

இந்த ஆய்வுகள் எதுவும் கடல் வாழ்விடத்தையும், கடல்வாழ் உயிரினங்களையும் பாதிக்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




## நவீன அறிவியலில் உச்சத்தை தொட்டுள்ள இந்தியா!






வெற்றிகரமாக சந்திரயானை நிலவில் தரையிறக்கியதன் மூலம் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்த இந்தியா, அடுத்ததாக சூரியனை ஆய்வு செய்ய ஆதித்யா 1 விண்கலத்தை அனுப்பியிருந்தது. இதன் பரப்பரப்பு அடங்குவதற்குள் சமுத்ராயன் மிஷனின் கீழ் உருவாக்கி வரும் மத்ஸ்யா 6000 நீர்மூழ்கிக் கப்பலின் போட்டோ மற்றும் வீடியோவை பகிர்ந்து அனைவரையும் ஆச்சரியத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

இந்த வாகனத்துக்குள் மூன்று பேர் வரை பயணிக்கலாம். ஆழ்கடல் வளங்களை ஆராய்வதற்கும் கடல் பல்லுயிர் பெருக்கத்தை மதிப்பிடுவதற்கும் இந்த ஆய்வு பயன்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. மூன்று பேர் இந்தியாவின் முதல் ஆட்களைக் கொண்ட ஆழ்கடல் பணியான சமுத்ராயனில் அனுப்பப்படுவார்கள். இது இந்தியாவின் கொன்டினென்டல் ஷெல்ஃப் மற்றும் பிரத்தியேக பொருளாதார மண்டலங்களுக்கு முக்கியத்துவம் அளித்து ஆழ்கடல் ஆய்வுகளை நடத்துவதற்கான இந்தியாவின் முயற்சியாகும்.

கடலின் கனிமங்களில் மங்கனீஸ், நிக்கல், கோபால்ட், செப்பு மற்றும் இரும்பு ஹைட்ரொக்சைட் ஆகியவை முக்கியமானவையாகும். இவை மனித தேவைக்குப் பயன்படுத்தக் கூடிய கனிமங்களாகும்.

இந்த ஆய்வின் மூலம் கடலின் ஆழத்தைப் பற்றி இதுவரை உலகுக்குத் தெரியாத பல விஷயங்கள் நமக்குத் தெரியவரும். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையான 'ப்ளூ எகானமி'யை இந்த மத்ஸ்யா 6000 ஆதரிக்கிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், வாழ்வாதாரம் மற்றும் வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்கும், கடல் சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்கும் கடல் வளங்களை நிலையான முறையில் பயன்படுத்துவதை அதிகரிப்பதும் இதன் நோக்கமாகும். அனைத்துப் பணிகளும் முடிந்த பிறகு 2026 ஆண்டு முடிவடைவதற்குள் மத்ஸ்யா 6000 இல் மனிதர்கள் மிகச்சாதாரணமாகப் பயணம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

# ஊடகங்களில் செய்தி வெளியானதையடுத்து கல்லரிப்பு மக்களுக்கு குடிநீர் விநியோகம்

'குடிநீருக்காக அல்லாடும் கல்லரிப்பு பழங்குடி மக்கள்!, அரசியல்வாதிகள் அதிகாரிகள் கவனிப்பார்களா?' என்ற தலைப்பில் தினகரன் பத்திரிகையில் எமது செய்தியாளர் சகாதேவராஜாவினால் எழுதப்பட்ட கட்டுரை யூலை மாதம் 1ஆம் திகதி வெளியாகி இருந்தது.

அதனையடுத்து bright future நிறுவனம் ஒருமாத காலத்தில் குடிநீர்த்திட்டத்தை புனரமைத்து குடிநீரை வழங்கி வருகிறது.

அதற்காக அங்குள்ள சமூக செயற்பாட்டாளர் மலர்ச்செல்வி உள்ளிட்ட சிலர் பலத்த முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். தற்போது மீண்டும் குடிநீர் கிடைத்ததையிட்டு மக்கள் ஊடகங்களுக்கும் சமூக செயற்பாட்டாளர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்து வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வெருகல் முருகன் ஆலயத்திற்கு அருகாமையில் அமைந்திருக்கின்றது அந்தக் கிராமம்.

கல்லரிப்பு என்பது அக்கிராமத்தின் பெயர். அந்தக் கிராமத்தில் 41 குடும்பங்களைச் சேர்ந்த தமிழ் பழங்குடியின மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் கடந்த காலங்களிலே தமது குடிநீர் மற்றும் தேவைகளுக்காக ஆற்றிலும் ஓடையிலும் தங்கியிருந்தார்கள்.

அந்த மக்களிடம் குடிநீர்ப் பிரச்சினை பற்றி கேட்டபோது அவர்கள் கூறியதாவது:

சுத்தமான நீர் எடுக்க வேண்டுமாக இருந்தால் சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் நடந்து அதனைப் பெற வேண்டிய தேவையுள்ளது. நாளடைவில் பிரதேச சபையூடாக குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. அதுவும் சில நேரங்களில தாமதமாகித்தான் கிடைக்கும்.

அவ்வேளைகளில் ஆற்றில் இருந்து நீரைப் பெறுவோம். எமது ஊரில் பாடசாலை இல்லை. மாணவர்கள் சீருடைகளை இங்கு கழுவினால் பழுப்பு நிறத்தில் காணப்படும். அருகிலுள்ள பாடசாலைக்குச் செல்லும் எமது மாணவர்களுக்கு அது சிரமம். ஆசிரியர்கள் சிலவேளைகளில் இந்த நிறம் பற்றி கேள்விகள் கேட்பதுண்டு.

இந்நிலையில் இங்கு குடிநீர்த் திட்டம் ஒன்றை மேற்கொள்ள வெளிநாட்டு உதவியோடு அரச சார்பற்ற நிறுவனமொன்று முன்வந்தது. Bright future international UK என்ற நிறுவனம்தான் இத்திட்டத்திற்கு நிதி உதவி வழங்கியது. இந்த குடிநீர்த் திட்டம் 31. 03. 2023 இல் ஆரம்பிக்கப்பட்டது.

ஆற்றில் இருந்து நீரைப் பெற்று சுத்திகரிப்புச் செய்து அதனை வழங்குவதற்காக மின்சார செலவுக்காக மாதம் 100 ரூபா வழங்குமாறு மக்களிடம் கோரப்பட்டது. மக்களும் மகிழ்ச்சியில் நூறு ரூபா வழங்கினார்கள். ஆனால் அந்த மகிழ்ச்சி ஒரே ஒரு மாதம் வரைதான் நீடித்தது.

ஒருமாதமே குடிநீர் கிடைத்தது. அதுவும் எதிர்பார்த்த சுத்தமான நீர் இல்லை. அதைனக் கூட ஏப்ரல் மாதம் மாத்திரமே வழங்கியிருந்தார்கள். அதன் பின்பு குடிநீர் வழங்கப்படவில்லை. தற்போது இக்குடிநீர்த் திட்டமும் நிறுத்தப்பட்டு விட்டது. தற்போது நாங்கள் குடிநீருக்காக வெகுதூரம் செல்ல வேண்டிய அவசியம் உள்ளது.



இந்நிலையில் மக்கள் வெகுண்டெழுந்து அந்த குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவிய ஒப்பந்தக்காரரிடம் கேட்ட பொழுது அதற்குரிய இரசாயன திரவம் ஒன்று வரும், அது வருகின்ற பொழுது குடிநீர் தருவோம் என்று கையை விரித்து விட்டார்.

அதனால் குடிநீருக்காக நாம் அல்லாட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது".

இவ்வாறு மக்கள் தெரிவித்தனர்.

தற்பொழுது அந்த மக்கள் குடிநீருக்காக மீண்டும் மீண்டும் தொலைதூரம் பயணிக்க வேண்டி இருக்கின்றது. இதனை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் கவனிக்க வேண்டும் என்று அந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். அதேவேளை ஊடகங்களிலும் இதுகுறித்து பரவலாக செய்திகள் வெளியாகின.





**காரைதீவு குறூப் நிருபர்...**

---

# பாலமுனை பிரதேச வைத்திசாலையில் PSSP திட்டம் வெற்றிகரமாக முன்னெடுப்பு

உலக சுகாதார நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட PSSP திட்டம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டு சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட வைத்தியசாலைகள் அனைத்திலும் PSSP திட்டம் கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டு இற்றைவரை சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

பாலமுனை பிரதேச வைத்திசாலையிலும் PSSP திட்டமானது கடந்த 2022ம் ஆண்டு 05 ஆம் மாதம் முதல் அறிமுகப்பட்டு 35வயதிற்கு மேற்பட்டோர் அனைவரினதும் சுகாதார நிலைமைகளை இனங்கண்டு அவர்களுக்கான மருத்துவ கிளினிக் என்பன இற்றைவரை இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் முதல்கட்டமாக 25 வீதமானோருக்கு தொற்றா நோய் பரிசோதனையை குறுகிய காலத்திற்குள் மேற்கொண்டு பாலமுனை பிரதேச வைத்தியசாலை வெற்றிகண்டுள்ளது.

பாலமுனை பிரதேச வைத்தியசாயின் பொறுப்பு வைத்தியர் எம்.ஜே.எம். நௌபல் தலைமையில் இத்திட்டத்தினை சிறந்த முறையில் முன்னெடுத்து செயற்பட்டமைக்கான கௌரவிப்பு சான்றிதழ் பாலமுனை வைத்தியசாலைக்கு கிடைத்துள்ளது.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட இக்கௌரவிப்பு சான்றிதழை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம். றிபாஸ், திட்டமிடல் பிரிவு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம்.மாஹிர் ஆகியோர் பாலமுனை பிரதேச வைத்தியசாலைக்கென வைத்திய அதிகாரி நௌபலிடம் கையளித்தனர்.

இது குறித்து பாலமுனை பிரதேச வைத்திய அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில், இப்பாராட்டானது எனக்கு மட்டுமல்லாது இப்பணியில் அர்ப்பணிப்புடன் சொயலாற்றிய வைத்திய சாலையின் உத்தியோகத்தர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் வைத்தியசாலை அபிவிருத்தி குழு மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் உரித்தாகும் என்பதோடு இதற்கான பூரண ஒத்துழைப்பையும் உதவியையும் வழங்கிய பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கும் எமது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டையும் தெரிவிக்கின்றோம் என்றார்.

**பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்...**

# மத்திய வங்கியின் 02 சட்டமூலங்கள்; சபாநாயகர் கையெழுத்திட்டார்



இலங்கை மத்திய வங்கி சட்டமூலம் மற்றும் வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கையொப்பமிட்டு நேற்று முன்தினம் (14) சான்றுரைப்படுத்தினார்.

இலங்கை மத்திய வங்கி சட்டமூலம் கடந்த ஜூலை மாதம் 20 இல் குழு நிலையில் முன்வைக்கப்பட்டு திருத்தங்களுடன் மேலதிக வாக்குகளால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் வாக்கெடுப்பின்றி கடந்த ஜூலை மாதம் 21 இல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதற்கமைய, 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கி சட்டம் மற்றும் 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என்ற பெயரில் இந்தச் சட்டங்கள் நடைமுறைக்கு வருகின்றன.

சபாநாயகர் சான்றுரைப்படுத்தும் நிகழ்வில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ச அபேரத்ன மற்றும் சட்டவாக்கப் பணிப்பாளரும் தொடர்பாடல் பதில் பணிப்பாளருமான ஜனகாந்த சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

## இலங்கையின் தொலைநோக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

இந்துசமுத்திர வலயத்தின் ஒற்றுமைக்கான வலுவான வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதால், இந்துசமுத்திரத்தின் வர்த்தக பாதைகளிலிருந்து உலக தொடர்பாடல்கள் வரை புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய முறைமைகள் தொடர்பாக தெளிவுபடுத்தினார். ஒவ்வொரு நாடுகளினதும் தேசிய தேவைப்பாடுகள் சர்வதேச கட்டமைப்புக்குள் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும், அவர் சுட்டிக்காட்டினார். கொவிட்19 தொற்றுக்குப் பின்னர் இலங்கையின் தற்போதைய பொருளாதார மீட்சிக்கான வலுவான மறுசீரமைப்பு மற்றும் மறுமலர்ச்சி நிகழ்ச்சிநிரல்களை எடுத்துரைத்த அவர், இந்துசமுத்திர வலயத்தில் இலங்கை தனித்துவமான இடத்தை பெற்றுள்ளதால், இந்துசமுத்திர வலயத்தின் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதில் இலங்கை முக்கிய பங்கை வகிக்குமெனவும், அவர் தெரிவித்தார்.

வலயத்தின் கடல்சார் பாதுகாப்பு, கடல் அடிவாரத்திலுள்ள இணைய கேபிள்களை பாதுகாத்தல், சட்டவிரோதமான மீன்பிடி மற்றும் ஆட்கடத்தலுக்கு தீர்வு, கடல் மாசடைவதை மட்டுப்படுத்தல், சுற்றாடல் பிரச்சினைகளை தீர்த்தல், இடர் நிவாரண சேவைகளை வழங்குதல் உள்ளிட்ட விடயங்கள் திறந்த இந்துபசுபிக் வலயத்தை மேம்படுத்துவதற்கான இலங்கையின் மத்தியஸ்த கொள்கைகளில் ஒன்றாகும். மனிதாபிமான மற்றும் அனர்த்தங்களின் போதான நிவாரணங்கள் (HADR) வழங்குதல் தொடர்பாக இலங்கையின் பொறுப்புகளை கருத்தில் கொண்டு, மறுசீரமைப்புகளை மேற்கொள்ளும் போது, நிலைத்தன்மை மற்றும் முன்னேற்றத்தை அடைந்துகொள்ள முடியும்.

சர்வதேச ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்வதற்கு இலங்கையின் மறுசீரமைப்பு மற்றும் பொருளாதார நிலைத்தன்மை முக்கிய பங்கு வகிக்குமென்பதுடன், நிலையானதும் நம்பகமானதுமான விம்பத்தை தோற்றுவிக்க உதவும்.

இலங்கையின் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் முயற்சிகளில் தனித்துவமான மைல்கல் இலக்கென மேற்படி முற்சிகளை குறிப்பிடலாம். கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் ஆரம்பக்கட்டங்களில், இலங்கை சர்வதேச பங்குதாரர்களிடத்தில் உத்தரவாதத்தை கோரியிருந்தது. பெரிஸ் சமவாயத்துடன் இணைந்து இந்தியாவும் சீனாவும் உயர் பங்களிப்பை வழங்கியிருந்தன. பிரதான பங்குதாரர்களின் தொடர்ச்சியான ஆதரவை இலங்கை எதிர்பார்க்கிறது.

## நிதி அளித்தலுக்கு எதிரான... (03ஆம் பக்கத் தொடர்)

நிதி அளித்தல் ஆகியவற்றுக்கு எதிராக சர்வதேச இணக்கப்பாடுகளை பின்பற்றும் போது, நீதிமன்ற செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அவசியமான வழிகாட்டல்களை உறுப்பு நாடுகளுக்கு வழங்கும் நோக்கில் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

நிதி நடவடிக்கை செயலணியினால் பிராந்திய ரீதியில் நிறுவப்பட்டுள்ள 9 அலுவலகங்களினூடாக 200 நாடுகள் மேற்பார்வை செய்யப்படுகின்றன.

2011 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் இரண்டு தடவைகள் நிதி நடவடிக்கைக்குழு இலங்கையை 'சாம்பல் பட்டியலில்' (Grey List) இணைத்திருந்ததுடன், ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கையை கறுப்புப் பட்டியலில் சேர்த்திருந்தது.

இலங்கைக்கான மூன்றாவது அந்நியோன்ய மதிப்பீடு 2025ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் முன்னெடுக்கப்படவுள்ளது. எனவே, இலங்கையின் பண மோசடி மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதி அளித்தலுக்கு எதிரான (AML/CFT) கட்டமைப்பில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றமடைய வேண்டும்.

மூன்றுநாள் விஜயத்தின் போது இலங்கை ஜனாதிபதி, பிரதம நீதியரசர், வெளிவிவகார அமைச்சர், சட்டமா அதிபர் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் உள்ளிட்ட உயர் மட்ட அதிகாரிகளுடன் தூதுக்குழுவினர் கலந்துரையாடினர்.

இதன்போது இலங்கை தலைமைத்துவத்தினால் பொருளாதார மற்றும் சமூகப் பாதுகாப்புக்கான இந்த அந்நியோன்ய மதிப்பீட்டின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது.

## நீதிபதி இளஞ்செழியனின்... (03ஆம் பக்கத் தொடர்)

வைத்தியர் இளந்திரையன், மேல் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன், ஆசிரியர் சிவகௌரி, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இளம்பிறையன் மற்றும் இளங்குமரன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். இவரது பூதவுடல் வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் கொழும்பிலுள்ள ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்படுமென்பதுடன், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் மேற்கு கேணியடியிலுள்ள அவரது மகன் மாணிக்கவாசகர் இளம்பிறையனின் இல்லத்தில் அஞ்சலிக்காக பூதவுடல் வைக்கப்படும். இந்நிலையில், எதிர்வரும் திங்கட்கிழமை (18) முற்பகல் 11.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று, பின்னர் பூதவுடல் அவரது சொந்த ஊரான வேலணைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, சாட்டி இந்துமயானத்தில் தகனக்கிரியை இடம்பெறவுள்ளதாக, அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

## மதவாச்சி பிரதேசத்தில்... (03ஆம் பக்கத் தொடர்)

அதேயிடத்தை வசிப்பிடமாகக் கொண்ட இளைஞரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தார். சம்பவத்தில் உயிரிழந்த இளைஞருக்கும் இவரது தந்தைக்குமிடையிலான பிரச்சினையின் போது ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை தொடர்ந்து, இந்த இளைஞரின் தந்தையும் மூத்த சகோதரனும் பொல்லினால் அடித்துக் கொலை செய்துள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. பிரேத பரிசோதனைக்காக சடலம் மதவாச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தில் 56 வயது மற்றும் 27 வயது சந்தேகநபர்களே பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

## மாகாண சபைகள்... (03ஆம் பக்கத் தொடர்)

வழங்கப்பட வேண்டிய இடங்கள் தொடர்பாக இன்னும் அறிக்கை இல்லை. கொழும்பு மாவட்டத்தில் இன்னமும் வரி அறவீடு முறையாக மேற்கொள்ளப்படவில்லை. கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களை உள்ளடக்கிய மேல் மாகாணம் இலங்கையின் வசதி படைத்த மாகாணமாகும். வளம்மிக்க மாகாணத்தில் வரி அறவீடு முறையாக மேற்கொள்ளப்படா விட்டால் அமைச்சு என்ற வகையில் அதற்கு பொறுப்பு சொல்ல வேண்டும்.

தொலைதூர கிராமங்களில் தகன சாலைகள் இல்லை. அத்தகைய திட்டத்துக்கு திறைசேரி பணம் கொடுக்க முடியாதென்று கூற முடியாது. சில நகரசபைகளில் இரண்டு அல்லது மூன்று உள்ளன. அவற்றில் செயற்படுவது ஒன்றுதான். தொலைதூரப் பகுதிகளில் தகன சாலைகள் இல்லாவிட்டால் நகர்ப்புறங்களில் தகனம் செய்வதற்கான செலவு மற்றும் முறை தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். மாகாண சபையும் உள்ளூராட்சி நிறுவனங்களும் எம்மை ஆதரிக்கும் நிதி நிறுவனங்களை ஒன்றிணைத்து புதிய அணுகுமுறைக்கு நாம் செல்ல வேண்டியது அவசியமாகும். அதனாலேயே மீள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, கழிவகற்றும் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை நாம் கலந்துரையாடி கவனம் செலுத்த வேண்டும்.

## துறைமுக நகரிலுள்ள... (03ஆம் பக்கத் தொடர்)

கொழும்புத்துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் தொடர்பாக ஆராயப்பட்டன.

எந்தச் சட்ட அடிப்படையில் அவ்வாறான உணவுக்கூடங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்கினீர்கள், எந்த அடிப்படையில் அவற்றை 2027ஆம் ஆண்டு அகற்றுவதற்கு திட்டமிட்டுள்ளீர்கள் என்று அரசாங்க நிதி பற்றிய குழு, ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடம் வினவியது. இது தொடர்பாக சட்டமாஅதிபரின் ஆலோசனை பெறப்பட்டதா? என்றும் கேள்வியெழுப்பியது. இந்த விடயம் தொடர்பான தகவல்களை கூடிய விரைவில் குழுவில் சமர்ப்பிக்குமாறு கொழும்புத்துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு மற்றும் சட்ட மாஅதிபர் திணைக்களத்துக்கு பரிந்துரைக்கப்பட்டது.

## 2028 வரை... (03ஆம் பக்கத் தொடர்)

நாடளாவிய ரீதியில் இயங்கும் அரச கால்நடைப் பண்ணைகளை அபிவிருத்தி செய்வதுடன், இந்தத் தொழில்த்துறையின் அபிவிருத்திக்கு அதிக பங்களிப்புகளை வழங்கும் தனியார் கால்நடைப் பண்ணைகளை மேம்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## போதைப்பொருள்...

அவை தொடர்பான அவதானிப்புகளையும் விதப்புரைகளையும் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதற்காக கடந்த ஜூன் 8ஆம் திகதி அமைக்கப்பட்ட பாராளுமன்ற விசேட குழுவினால் இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தலைமையிலான இந்த விசேட குழு 11 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டுள்ளது. இதன் செயலாளராக பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ஸ அபேரத்ன செயற்படுகின்றார்.

பொதுமக்கள் தமது முன்மொழிவுகளையும் கருத்துகளையும் எழுத்து மூலம் legis_com@parliament.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது செயலாளர், பாராளுமன்ற விசேட குழு, இலங்கை பாராளுமன்றம், ஸ்ரீஜயவர்தனபுர, கோட்டே என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிவைக்க முடியும். இந்நிலையில், இந்த விடயத்தில் ஆர்வமுள்ள தரப்பினர் 2023 ஒக்டோபர் 12ஆம் திகதிக்கு முன்னர் தமது முன்மொழிவுகளையும் கருத்துகளையும் அனுப்பிவைக்க முடியும். தமது கருத்துகளை எழுத்து மூலம் சமர்ப்பிக்கும் நபர்களிடமிருந்து அவ்விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராய்வதற்கு குழு அவசியமென்று தீர்மானிக்கும் பட்சத்தில் ஆவணங்களுடன் அதன் முன் தோன்றுமாறும் சம்பந்தப்பட்ட தரப்பினர் அழைக்கப்படுவர்.

## இரண்டாம் கட்ட...

விலகுவதற்கு இந்த அரசாங்கம் தயாராக இல்லையெனவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"இன்று நாங்கள் ஆரம்பித்த மீளாய்வுக் கலந்துரையாடல் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு நடைபெறுமென்பதுடன், இந்தக் கலந்துரையாடல் நிறைவடைந்த பின்னர் ஐ.எம்.எப். இன் இரண்டாம் கட்ட கடன் உதவியை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

கடன் மறுசீரமைப்பு மற்றும் வெளிநாட்டு நிதிச் சந்தையில் பிரவேசிப்பதற்கான சக்தியை சர்வதேச நாணய நிதியம், இதனூடாக இமக்கு பெற்றுத் தருகின்றது.

அரசாங்கமென்ற ரீதியில் நாங்கள் எங்கள் கடமைகளை நிறைவேற்றி இருக்கின்றோம். சில விடயங்களில் நீதிமன்ற செயற்பாடுகள் இடம்பெற்றமையால், சில சட்டமூலங்களை நிறைவேற்ற சிறிது தாமதம் ஏற்பட்டது. இரண்டாம் கட்ட கடன் உதவியை பெற்றுக்கொள்ளவும் அதனூடாக முன்னோக்கிச் செல்லவும் எமக்கு எந்தப் பிரச்சினைகளும் ஏற்படாது. சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட இந்தக் கடன் திட்டத்திலிருந்து இடையில் விலகுவதற்கு இந்த அரசாங்கம் தயாராக இல்லையென்பதுடன், எதிர்வரும் 2024ஆம் ஆண்டிலிருந்து பொருளாதார வளர்ச்சியை நோக்கிப் பயணிக்க எதிர்பார்க்கின்றோம்" என்றார்.

## கோழி இறைச்சி,...

செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாதெனவும், அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் (14) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அமைச்சர் மஹிந்த அமரவீர இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

“கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியில் நம் நாடு தன்னிறைவு பெற்றிருந்தாலும், கடந்த காலங்களில் ஏற்பட்ட கொவிட் நோய்த்தொற்று நிலைமையும் பொருளாதார நெருக்கடி காரணமாகவும் மற்றும் கால்நடைத் தீவன உற்பத்தி குறைந்ததன் விளைவாகவும் கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தி குறைந்தது.

தற்போது கோழிப் பண்ணைகளுக்கு சுமார் 3,420,000 புதிய கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், பெரும்பாலும் அவை எதிர்வரும் டிசெம்பருக்குள் முட்டையிடும் பருவத்துக்கு வளர்ந்துவிடும். எனவே, டிசெம்பருக்கு பின்னர், இந்த நாட்டில் முட்டை உற்பத்தி மேலும் அதிகரிக்கும்.

கோழிப் பண்ணைகளுக்கு தேவையான தீவன உற்பத்திக்காக சோளத்தை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பை இந்தத் தொழில்துறையினருக்கு வழங்கியுள்ளோம். எதிர்காலத்தில் எமது மக்கள் இதன் மூலம் பயனடைவர்.

இடைக்கால, கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் படி, வடமாகாணத்தில் கால்நடை வளத்தை மேம்படுத்தும் பணிகளை வலுவூட்டுவதற்கான திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்காக செலவிடப்பட்ட தொகை 37 மில்லியன் ரூபாவாகும். சிறிய மற்றும் நடுத்தரக் கோழிப்பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு நாள் வயதுடைய நாட்டுக் கோழிக் குஞ்சுகளை வழங்குதல், கிராமப்புறங்களில் முட்டை உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் போசாக்கை அதிகரிப்பது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக 48 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. அண்மைய பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட் தொற்றுக் காரணமாக உள்நாட்டுக் கோழி இறைச்சி உற்பத்தி 30 சதவீதத்தினால் குறைந்துள்ளது. ஆனால், தற்போது பிராய்லர் கோழிக் குஞ்சுகள் அதிகளவில் பண்ணைகளுக்கு சேர்க்கப்படுவதால், இந்த ஆண்டு இறுதிக்குள் நம் நாட்டின் கோழி இறைச்சி உற்பத்தி, முந்தைய நிலைக்கு திரும்பலாமென்று குறித்த தொழில்த்துறையினர் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக இந்த ஆண்டு இறுதிக்குள் கோழி இறைச்சி மற்றும் முட்டை விலை மேலும் குறையலாமென எதிர்பார்க்கப்டுகின்றது.

## நாட்டை அராஜக...

ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன நேற்று (15) காலை கொழும்பு கோட்டையிலுள்ள குற்றப்புலனாய்வுத் திணைக்களத் தலைமையகத்தில், இது தொடர்பாக அவசர விசாரணைகளை மேற்கொள்ளுமாறு முறைப்பாடு செய்ததையடுத்து, ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், "இலங்கை ரயில்வே திணைக்களத்தில் தொழிற்சங்கம் அல்லாத சிலரால் மேற்கொள்ளப்பட்ட பணிப்புறக்கணிப்பு காரணமாக விலைமதிப்பற்ற இளைஞர்களின் உயிர்கள் பலியாகியுள்ளதுடன், பாரிய அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. உத்தியோகபூர்வ குடியிருப்பில் வசிக்கும் இந்திக்க தொடங்கொட என்ற நபர் மிகவும் தவறான ஒன்றைச் செய்தார். நாடு முழுவதும் வன்முறையை ஏற்படுத்தும் அனைத்து வேலைநிறுத்தங்களுக்கும் தொலைநோக்கு பார்வையற்ற அமைச்சரவை அமைச்சரே பொறுப்பென்றும் அமைச்சரின் மோசடி, ஊழல் மற்றும் கவனக் குறைவான செயற்பாடுகளினால் இவையெல்லாம் நடக்கின்றன என்ற கருத்தை சமூகமயமாக்கி, அதன் மூலம் மக்களின் வெறுப்பை எங்கள் மீது திருப்ப முயற்சித்துள்ளார் என குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்தேன்" என்றார்.

## இரு நாடுகளுக்கும்...

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இராணுவ மரியாதையும் வழங்கப்பட்டது.

சுமுகமான உரையாடலுக்கு பின்னர், இரு நாட்டுத் தலைவர்களும் இருதரப்பு பேச்சுவார்த்தையில் இணைந்துகொண்டனர்.

கியூபாவுக்கு விஜயம் செய்துள்ள இலங்கை ஜனாதிபதியை கௌரவத்துடன் வரவேற்பதாக தெரிவித்த கியூபா ஜனாதிபதி, இரு நாடுகளுக்குமிடையிலான நீண்டகால நட்புறவின் பெறுமதி தொடர்பாகவும் நினைவுகூர்ந்தார்.

கடந்த காலங்களில் இலங்கைக்கும் கியூபாவுக்குமிடையிலான பலமான சர்வதேச ஒத்துழைப்பை நினைவுகூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கியூபாவுக்கு எதிரான தடைகளை நீக்குமாறு கோரும் ஐ.நா. தீர்மானத்துக்கு இலங்கை எப்போதும் ஆதரவளித்து வருவதாகவும் மனித உரிமைகள் தொடர்பாக கியூபா பலதரப்பு தளங்களில் இலங்கைக்கு ஆதரவளித்ததையும் நினைவுகூர்ந்தார்.

எதிர்காலத்தில் சுகாதாரம், விவசாயம் மற்றும் விளையாட்டு ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்குமிடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பது தொடர்பாக இரு நாட்டுத் தலைவர்களும் நீண்டநேரம் கலந்துரையாடினர்.

உலகளாவிய ரீதியில் வடக்கு மற்றும் தென்பிராந்திய நாடுகளுக்கிடையில் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகிய துறைகளில் நிலவும் இடைவெளியைக் குறைப்பது தொடர்பாகவும் இரு தலைவர்களும் கவனம் செலுத்தியதுடன், சுகாதாரத்துறை தொடர்பான நிபுணத்துவ அறிவைப் பகிர்வது தொடர்பாகவும் ஆராய்ந்தனர்.

## கைதிகள்...

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "12ஆம் திகதியன்று நடைபெற்ற 25ஆவது தேசிய சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு அரசியலமைப்பில் 34ஆவது உறுப்புரையில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களுக்கமைய, சிறைப்படுத்தப்பட்டிருக்கும் கைதிகளுக்கு விசேட பொது மன்னிப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

பின்வரும் நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய, கைதிகளுக்காக இந்த பொது மன்னிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இதன் பிரகாரம் 2023.9.12ஆம் திகதியாகும்போது சிறைப்படுத்தப்பட்டு சிறைத்தண்டனை அனுபவித்துவரும் கைதிகளின் தண்டனை, அனுபவித்த வருடத்துக்கு அல்லது அதன் ஒருபகுதிக்கு ஒருமாத மன்னிப்பு வழங்குதல், அபராதம் செலுத்தாமை காரணமாக 2023.09.12ஆம் திகதியாகும் போது சிறைப்படுத்தப்பட்டு தண்டனை அனுபவித்துவரும் கைதிகளின் அனுபவித்துவரும் தண்டனையின் எஞ்சிய தண்டனைக் காலத்தை நீக்குதல், 2023.09.12ஆம் திகதியாகும் போது விதிக்கப்பட்டிருக்கும் தண்டனையில் அரைவாசி அல்லது அதற்கு அதிக காலத்தை செலுத்தியிருக்கும், 65 வயதை தாண்டியுள்ள சிறைக்கைதிகளின் தண்டனையின் எஞ்சிய காலத்தை நீக்குதல், 2023.09.12ஆம் திகதியாகும் போது 40 வருடம் அல்லது அதற்கு அதிக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, அந்த தண்டனையில் 20 வருடகால தண்டனையை அனுபவித்திருக்கும் (மேல் நீதிமன்றத்தினால் தண்டனை விதிக்கப்பட்ட திகதியிலிருந்து) சிறைக்கைதிகளின் தண்டனையில் எஞ்சிய தண்டனைக் காலத்தை நீக்குதல்,

## பத்து நாட்களுக்குள்...

கூட்டமொன்று கடற்றொழில் அமைச்சர் தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று (150 நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் போதே, அமைச்சர் இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர், யாழ். மாவட்ட இராணுவ கட்டளை தளபதியின் பிரதிநிதி, பிரதேச செயலாளர்கள், பொலிஸ் உயரதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களாகிய பலரும் கலந்துகொண்டனர்.

## சீன ஆய்வுக்....

தெளிவுபடுத்தும் நோக்கில் ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்று நேற்று முன்தினம் (14) வெளிவிவகார அமைச்சின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது 'ஷி யான் 6' என்ற சீன ஆய்வுக்கப்பலின் வருகை மற்றும் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் நாடுகளுக்கிடையே நிலவும் இராஜதந்திர மோதல்கள் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். சீன ஆய்வுக்கப்பலான 'ஷி யான் 6' இன் வருகையுடன் தொடர்புடைய விவகாரங்களில் தாம் (வெளிவிவகார அமைச்சு) நேரடியாக தொடர்புபடவில்லை எனத் தெரிவித்த அவர், அக்கப்பலின் வருகைக்கான திகதி உள்ளிட்ட விடயங்கள் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார். 'ஷி யான் 6' கப்பலின் வருகை தொடர்பாக வெளியான செய்திகளை அடுத்து இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் நாடுகளுக்கிடையே நிலவும் முறுகல் நிலையை இந்துசமுத்திர வலய நாடுகள் அமைப்பின் அமைச்சர்கள் மட்டக் கூட்டத்தின் போது எவ்வாறு கையாளப் போகின்றீர்கள் என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் அலி சப்ரி, எந்தவொரு நாடும் இவ்வாறான விடயங்களை இராஜதந்திர ரீதியிலேயே கையாளும் என்றார்.

## பிரபல நடன...

கதாநாயகனாக பிரபுதேவா நடிக்கின்றார். இந்தத் திரைப்படத்தின் பாடலொன்றின் ஒளிப்பதிவுக்காகவே பிரபுதேவா இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

## சசித்ர சேனநாயக்கவுக்கு...

நடைபெற்ற போது, சசித்ர சேனநாயக்க சார்பாக விடுக்கப்பட்ட பிணைக் கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டுள்ளது. 2020 லங்கா பிரிமியர் லீக் போட்டியில் தம்மிக்க பிரசாத் மற்றும் இளம் வீரர் தரிந்து ரத்நாயக்கவை ஆட்ட நிர்ணயம் செய்ய தூண்ட முயன்றதாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கடந்த மார்ச் மாதம் விசாரணை ஆரம்பமானதையடுத்து, சசித்ர சேனநாயக்க மூன்று மாதங்களுக்கு வெளிநாடு செல்லவும் தடை விதிக்கப்பட்டது.

## அகழ்வின் 09...

17 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் கடந்த 6ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இந்த அகழ்வுப் பணிகள் முல்லைத்தீவு நீதிமன்ற பதில் நீதிபதி எஸ்.கெங்காதரன் முன்னிலையில் தொல்லியல் பேராசிரியர் பரமுபுஷ்பரட்ணம், முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி கே.வாசுதேவா, யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி செ.பிரணவன், சட்டத்தரணி கே.எஸ்.நிரஞ்சன், கிராம அலுவலர், தடயவியல் பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டன.

## அரசியல்வாதிகளிடமிருந்து....

பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்திராரச்சி தலைமையில் அண்மையில் கூடியபோதே இந்த அறிவுறுத்தலை வழங்கியது.

. பொலிஸ் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் முன்னிலையில் கருத்துத் தெரிவித்த வெளிப்படையான மற்றும் பொறுப்புக் கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர், பொலிஸ் தொடர்ந்தும் மக்கள் நட்புறவான நிறுவனமாக செயற்படுவது அத்தியாவசியமானதென்றும் இதற்கமைய அரசியல்வாதிகளிடமிருந்து பொலிஸ் வேறுபடுத்தப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

## மனித எச்சங்களை மறைக்க...

மீட்கப்பட்ட எச்சங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று தென்னிலங்கை தலைவர்கள் குரல் கொடுக்க வேண்டுமெனவும், அவர் வலியுறுத்தியுள்ளார். மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் கிடப்பிலே உள்ளதெனவும் ஒவ்வொரு இடத்திலும் மனித எச்சங்களை கண்டுபிடித்து கிடப்பில் போடும் நிலையே இலங்கையில் காணப்படுவதாகவும், அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மக்களை ஏமாற்றும்...

அரசியல் இலாபத்தை பெற்றுக்கொள்ளும் வகையிலேயே அவர் இந்தக் கருத்தை தெரிவித்துள்ளதாகவும், அவர் குற்றம் சுமத்தினார்.

# இலங்கையில் வருடாந்தம் 200 யானைகள் உயிரிழப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இலங்கையில் வாழும் சுமார் 5000 யானைகளில் அரைவாசிக்கும் அதிகமானவை உயிராபத்தை எதிர்கொண்டுள்ளதாக சுற்றாடல் மற்றும் ஜீவகாருண்ய அமைப்புக்கள் கவலை வெளியிட்டுள்ளன.

இலங்கையில் யானைகளின் உயிர்களை பாதுகாக்க எத்தனை அமைப்புக்கள் இருந்தாலும் அவற்றில் எதுவும் யானைகளின் நலன்களில் உண்மையான அக்கறையுடன் செயற்படுவதில்லையென சுற்றாடல் பாதுகாப்பு மைய அமைப்பின் பணிப்பாளர் ஹேமந்த விதானகே தெரிவித்தார்.

இதனால் வருடாந்தம் 200 யானைகள் உயிரிழப்பதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் வனாந்தரங்களில் மட்டுமன்றி சமய நிறுவனங்கள், மிருகக்காட்சி சாலைகள், உல்லாசப் பயணத்துறையிலும் கூட யானைகள் ஈடுபடுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

பொதுவாக அனைத்து இடங்களிலும் அப்பாவி மிருகங்களான யானைகள் துன்புறுத்தலுக்கு உட்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் யானை மனிதன் மோதலால் மனித உயிர்களும் பெருமளவில் உயிரிழப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தின் உடவளவ சிங்கராஜ வனாந்தரங்களிலும் கல்தோட்டை தியவின்ன,



ஹம்பேகமுவ பிரதேசங்கள் உட்பட அடர்ந்த காட்டுப்பகுதிகளில் கணிசமான யானைகள் மனித செயற்பாடுகள் காரணமாக உயிரிழப்பதாக தெரிவிக்கின்றனர்.

## மலைச்சாரல்




எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவின் 'சக்வல பிரபஞ்சம்' நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் 77வது பஸ்வண்டி நேற்றுமுன்தினம் களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரிக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, ஐ.ம.சக்தியின் களுத்துறை மாவட்ட தலைவர் சட்டத்தரணி அஜித் G பெரேரா ஆகியோர் கலந்துகொண்டனர். பேருவளை விசேட நிருபர்

# எல்ல நகரில் புதிய வர்த்தக வளாகம் திறப்பு



எல்ல நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட எல்ல வர்த்தக வளாகம் மக்கள் பாவனைக்காக நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 34 மில்லியன் ரூபா செலவில் இக்கட்டத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதன்போது புதிய வர்த்தக வளாகம் நிர்மாணிக்கப்பட்ட இடத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஐந்து வர்த்தகர்களுக்கு கடைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசனாயக, பிரதேச அரசியல் பிரமுகர்கள், ஊவா மாகாண உள்ளாட்சி ஆணையாளர் டி.எம்.எல்.எச். திஸாநாயக்க, பதுளை மாநகரசபையின் மாநகர ஆணையாளர் ஜகத் ஆரியரத்ன, எல்ல பிரதேச சபை செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

'நதிகள், ஓடைகளில் குப்பைகளை வீசவேண்டாம்'

# நீர்த்தேக்கங்களில் வாழும் உயிரினங்கள் இறக்கும் அபாயம்



(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)

கடும் மழை காரணமாக மத்திய மலைநாட்டில் சியத்தலகங்குல ஓயாவில் குப்பைகள் மிதந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. இவற்றில் பிளாஸ்டிக் பொருட்கள் அதிகமாக காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவற்றை அகற்ற மஸ்கெலியா பிரதேச சபை மற்றும் மின்சாரசபை முன் வர வேண்டுமெனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் பெருந்தோட்ட பகுதிகள் மற்றும் நகரங்களை ஊடறுத்து வரும் நதிகள், ஓடைகளில் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் குப்பைகளை வீச வேண்டாம் என நீர் மின் நிலைய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதனால் நீர்த்தேக்கங்களில் வாழும் உயிரினங்கள் இறக்கும் நிலை உருவாகியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# ஹாலிஎல ஸ்ரீ வீரசக்தி விநாயகப் பெருமான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம்

(பதுளை தினகரன் விசேட நிருபர்)

ஹாலிஎல அருள்மிகு ஸ்ரீ வீரசக்தி விநாயகப் பெருமான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, எதிர்வரும் 22 ஆம் திகதி வைரவர் மடை பூஜையுடன் நிறைவுபெறும்.

நாளை (17) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 18ஆம் திகதி பால்குட பவனியும், 1008 சங்காபிஷேகமும், 20ஆம் திகதி முத்தேர் பவனியும், 21ஆம் திகதி தீர்த்தோற்சவமும், கொடியிறக்கமும், பூங்காவன நிகழ்வும் நடைபெறுவதுடன் 22ஆம் திகதி இறுதியாக வைரவர் மடை இடம்பெற்று, அலங்கார உற்சவம் இனிதே நிறைவுபெறும்.

உற்சவ பூஜை நிகழ்வுகளை வேதாகம ரத்னம் சிவஸ்ரீ ஆறுமுகம் ரமேஷ் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியர்கள் மேற்கொள்வர்.

வருடாந்த அலங்கார உற்சவத்துக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய பரிபாலன சபையினரும், இந்து பரிபாலன சங்கத்தினரும், இந்து இளைஞர் மன்றத்தினரும் இணைந்து துரிதமாக மேற்கொண்டுள்ளனர்.

# கட்டுகஸ்தோட்டையில் காணி மோசடி தகவல் அறிந்தால் அறியத்தரவும்

கட்டுகஸ்தோட்டை தனியார் நிறுவன உரிமையாளர் மற்றும் அவரின் மனைவியிடம் பணமோசடியில் ஈடுபட்ட இருவர் தொடர்பில் கண்டி விசேட குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

காணி பெற்றுத் தருவதாகக் கூறி ரூ.5 கோடிக்கும் அதிகமான பணத்தை இவர்கள் மோசடி செய்துள்ளனர். கண்டி விசேட குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற 9 முறைப்பாடுகளுக்கமையவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முத்துதந்திரிகெ ஜூட் பெர்னாண்டோ மற்றும் ஸ்ரீமதி திஸ்ஸ குமாரி ஆகிய சந்தேகநபர்களின் புகைப்படங்களை விசாரணைப் பிரிவினர் வெளியிட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தால் 0718591045 அல்லது 0812222222 ஆகிய இலக்கங்களுக்கு அறிவிக்குமாறு பொதுமக்களிடம் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## வடக்கின் உதயம்

# காணாமல் போன பொலிஸ் உத்தியோகத்தர் சடலமாக மீட்பு

(கிளிநொச்சி குறூப் நிருபர்)

கிளிநொச்சியில் காணாமல் போனதாக கூறப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை காலை 6 மணியளவில் மாலையாளபுரம் புது ஜயன்கன்குளம் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த நபர்களை கைது செய்வதற்காக மூன்று பொலிஸார் சென்றுள்ளனர்.

இதன்போது கசிப்பு உற்பத்தியில் ஈடுப்பட்டவர்கள் பொலிஸாரை கண்டு குளத்துக்குள் தப்பி ஓடிய போது அவர்களை பொலிஸார் தனித்தனியாக ஒவ்வொரு வழியாக துரத்திச் சென்றுள்ளனர்.

இறுதியில் இரு பொலிஸார் திரும்பிய போதும் ஒருவர் காணாமல் போயிருந்தார். அவரை நேற்றைய தினம் இராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்து தேடிய போதும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்நிலையில் அவர் குளத்திற்குள் மூழ்கியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் தேடுதலை மேற்கொண்டதில் காணாமல் போன பொலிஸ் உத்தியோகத்தர் குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் பன்சலகொட வலஸ்முல்ல பகுதியைச் சேர்ந்த லியனகே சத்துரங்க என்பவர் உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில்

# 15 பிரதேச செயலகப் பிரிவுகளில் போதைப்பொருள் பாவனை அதிகரிப்பு

(கோப்பாய் குறூப் நிருபர்)

யாழ்.மாவட்டத்தில் 15 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்றுமுன்தினம் (14) நடைபெற்ற போதைப்பொருள் தடுப்பு தொடர்பான விசேட கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கொட்டடி, நாவந்துறை, திருநகர் ஆகிய பகுதிகளும் சாவகச்சேரி பிரதேச செயலகத்துக் குட்பட்ட நாவற்குளி, கெட்டபெலி, வரணி. கொடிகாமம் ஆகிய பகுதிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதேபோன்று வடமராட்சி பருத்தித்துறை பிரதேச செயலகத்துக் குட்பட்ட அல்வாய் வடக்கு, கற்கோவளம், மந்திகை மற்றும் வேம்படி ஆகிய பகுதிகளும் நல்லூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மணியம் தோட்டம், அரியாலை மற்றும் பாற்பண்ணைப் பகுதிகளும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட நாவலடி.

கோப்பாய் பிரதேச செயலகத்துக் குட்பட்ட யோகபுரம் ,செல்வபுரம், ஊரெழு, பொக்கணைப் பகுதிகளும் கரவெட்டி செயலகத்துக்குட்பட்ட துன்னாலை கிழக்கு குடாவத்தை மற்றும் ராஜ கிராமம் ஆகிய பகுதிகளும் தெல்லிப்பழை செயலகத்துக் குட்பட்ட குள மங்கல், மாவைகாலடி. நல்லிணக்கபுரம், கலைநகர். அந்தோணிபுரம், சுதந்திரபுரம், வள்ளுவர்புலம். கடுவன்புலவு ஆகிய பகுதிகளிலும் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் பாதுகாப்பு தரப்பினர் எவ்வாறான நடவடிக்கைகள் எடுத்துள்ளனர் என்பது தொடர்பில் ஆராய்ந்தார். விரைவில் குறித்த பகுதிகளைச் சேர்ந்த பிரதேச செயலாளர், பாதுகாப்பு உயர் அதிகாரிகளை அழைத்து இதுதொடர்பில் கலந்துரையாடப்படும் எனவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

# இரணைமடுக்குளத்தின் 19160.5 ஏக்கர் நிலப்பரப்பில் பெரும்போக நெற்செய்கை

பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்பாசனக்குளமான இரணைமடுக்குளத்தின் 19160.5 ஏக்கர் நிலப்பரப்பில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்பாசனக் குளமான இரணைமடுக்குளத்தின் இவ்வாண்டுக்குரிய பெரும் போக பயிர்செய்கை தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து குறிப்பிடுகையில், கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடுக்குளத்தின் கீழ் இவ்வாண்டு புதிதாக தயாரிக்கப்பட்ட நெற்காணி பதிவேட்டின் படி 19,160.5 ஏக்கர் நிலப்பரப்பில் 2023 / 2024 பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. அதாவது 36 அடி நீர் கொள்ளளவு கொண்ட குளத்தின் நீர்மட்டம் தற்போது 09 அடி 06 அங்குலமாக காணப்படுகின்றது. பருவ மழையை எதிர்பார்த்து மேற்கொள்ளுகின்ற வகையிலே இந்த பெரும் போகத்துக்கான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு எடுக்கப்பட்டிருக்கின்ற தீர்மானங்களுக்கு அமைவாக விவசாயிகள் ஒத்துழைப்புகளை வழங்கி தங்களுடைய பெரும்போக பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இக்கலந்துரையாடலில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் பா.தேவரதன் பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் கருணாநிதி, இரணைமடு நீர்ப்பாசன பொறியியலாளர் செந்தில் குமரன், துறைசார் திணைக்களத் தலைவர்கள், பதவி நிலை உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# கடமைக்குச் சென்றவர் வீதியில் மயங்கி விழுந்து மரணம்

(சாவகச்சேரி விசேட நிருபர்)

தென்மராட்சி மட்டுவில் பிரதேசத்திலிருந்து கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிறுவனத்துக்கு கடமைக்கு சென்ற ஊழியர் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை காலை திடீர் சுகவீனம் ஏற்பட்டு வீதியில் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். ஊழியர் பஸ்ஸிலிருந்து இறங்கி தனது அலுவலகத்துக்கு செல்ல முற்பட்ட போதே வீதியில் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் கைதடி பனை ஆராய்ச்சி நிறுவன பணியாளரான 49 வயதான மா.சதீஸ்குமார் எனத் தெரிய வருகிறது.

மாரடைப்பு காரணமாக மரணம் சம்பவித்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.




பல்கலைக்கழகங்களுக்கிடையேயான 14 ஆவது மினி ஒலிம்பிக் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக பெண்கள் பளுதூக்கு அணி 5 தங்கபதக்கம், 2 வெள்ளி, 1 வெண்கல பதக்கம் என 08 பதக்கங்களைப் பெற்று இவ்வருட சம்பியன் பட்டத்தை பெற்றுக்கொண்டது. படத்தில் வெற்றிப் பெற்ற வீரர்களை காணலாம்.

(படம்; யாழ்.விசேட நிருபர்)

# கிழக்கின் குரல்



## வவுணதீவு பிரதேசத்தில் சேதமடைந்த வீதிகளை புனரமைக்க நடவடிக்கை

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகத்தில் கிராம வீதிகள் மற்றும் பாலங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பான கலந்துரையாடலொன்று பிரதேச கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தனின் வேண்டுகோளின் பேரில், இணைப்புச் செயலாளர் பிரசாந்தனின் பங்குபற்றுதலுடன் இக்கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போது வவுணதீவுப் பிரதேசத்தில் முற்றாக சேதமடைந்த வீதிகளை இனங்கண்டு அவற்றை அபிவிருத்தி செய்வதன் அவசியம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் பிரதேசத்தின் சகல பிரிவுகளிலும் காணப்படும் சேதமடைந்த வீதிகள், பாலங்கள் தொடர்பான தரவுகள் பெறப்பட்டன.

பிரதேச செயலாளர் எஸ். சுதாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ். சபேசன் உட்பட கிராம வீதி அபிவிருத்தி அதிகாரி, பொருளாதார அபிவிருத்தி, கிராம சேவை உத்தியோகத்தர்கள் , கிராம அபிவிருத்தி சங்க



உறுப்பினர்கள், பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## மு.கா.தலைவரின் வருகையை கண்டித்து சாய்ந்தமருதில் ஆர்ப்பாட்டம்





முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமின் வருகையை கண்டித்து சாய்ந்தமருதில் நேற்று ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் இன்று (16) சாய்ந்தமருதில் நடைபெறவிருக்கும் தலைவர் தின நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வருகை தரவுள்ளார். இதனை கண்டித்தே நேற்று சாய்ந்தமருதில் மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட பேரணியொன்று நடைபெற்றது.

## திருக்கோவில் உப மின்சாரசபை பணிமனை தரமுயர்வு

(காரைதீவு குறூப் நிருபர்)

தம்பிலுவில் பிரதேசத்தில் தற்காலிகமாக இயங்கி வந்த திருக்கோவிலுக்கான உப மின்சார சபை பணிமனை தரமுயர்த்தப்பட்டு திருக்கோவிலில் அரச புதிய கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

திருக்கோவில் பிரதே செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் திறப்பு விழா உத்தியோகபூர்வமாக நடைபெற்றது.

இலங்கை மின்சார சபையின் கிழக்கு மாகாண பிரதிப் பொதுமுகாமையாளர் கே.விஜயதுங்கவினால் கட்டடம் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அம்பாறை பிரதான தலைமை பொறியலாளர் எம்.ப(f)ர்கான் திருக்கோவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.பத்மகுமார , திருக்கோவில் பிரதேச செயலக உதவிச்செயலாளர் க.சதிசேகரன் மற்றும் மின்சார சபை பொறியலாளர்களான யூ.மயூரன், எம் எலா.ஹரீஸ் மொகமட், உதவிப்பொறியாளர் எம்.நவ்பல், திருக்கோவில் மின்சார சபை அத்தியட்சகர் ஏ.அசோகதீபன், அத்தியட்சகர் சுலக்ஷன், சட்டத்தரணி யேகசுதன் ஆகியோரும் மின்சார சபை ஊழியர்கள் ,பொதுமக்கள் கிராம உறுப்பினர்கள் ,கிராம சேவகர்கள், மதகுருமார், நலன்விரும்பிகள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



## அல் பஹ்ரியா மகா வித்தியாலயத்தில் மாணவர் பாராளுமன்ற தேர்தல்

கல்வி அமைச்சின் புதிய சுற்று நிருபத்தின் அடிப்படியில் மாணவர் பாராளுமன்ற தேர்தல் முறைமை பாடசாலை மட்டத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் தேர்தல்கள் திணைக்களமும் கல்வியமைச்சும் இணைந்து பாடசாலைகள் தோறும் மாணவர் பாராளுமன்றங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

அம்பாறை மாவட்டம் கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட அல் பஹ்ரியா மகா வித்தியாலயத்தின் 2023ஆம் ஆண்டுக்கான மாணவர் பாராளுமன்றத்தை அமைப்பதற்கான வேட்பு மனுக்கள் கோரப்பட்டு தெரிவுக்கான தேர்தல் நேற்று பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம். பைஸால் தலைமையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

காலை 8.00 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பமாகி மு.ப 10.30 மணிக்கு முடிவடைந்தது. மாணவர்கள் மிக அமைதியான முறையில் மிக நீண்ட வரிசைகளில் நின்று தமது வாக்குகளை ஆர்வமாக பதிவு செய்து சென்றதைக் காணக்கூடியதாகவிருந்தது.



அத்துடன் நடைபெற்ற பாடசாலை மாணவர் தேர்தல் முறையானது தங்களுக்கு புதுவிதமான அனுபவத்தை தந்ததாகவும் இதன் மூலம் தேர்தல் தொடர்பான தங்களது அறிவையும் ஆளுமையையும் அதிகரிக்க முடிந்ததாகவும் மாணவர்கள் தெரிவித்தனர்.

தரம் 6 முதல் 13 வரையுள்ள மாணவர்களிலிருந்து தெரிவு செய்யப்படும் மாணவ பிரதிநிதிகளைக் கொண்டு மாணவர் பாராளுமன்றம் தாபிக்கப்படும். இதில் சபாநாயகர், பிரதமர், 10 அமைச்சர்கள், 10 பிரதி அமைச்சர்கள் என 95 மாணவ தலைவர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற்றது.

வாக்குப் பெட்டிகள் அனைத்தும் வாக்கெண்ணும் நிலையத்துக்கு வந்தடைந்ததும் மு.ப 10.45 மணிக்கு வாக்கு எண்ணு ம் பணிகள் ஆரம்பமாகியதுடன் 11.45 மணியளவில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விபரங்கள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டன.

## அட்டாளைச்சேனையில் மூலிகைத் தோட்டம்

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)



அட்டாளைச்சேனையில் மூலிகைத் தோட்டமொன்றை அமைத்து, பராமரித்து, பாதுகாக்கும் பணியில் ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் என். சம்சுதீன ஈடுபட்டு

வருகின்றார்.

அருகிவரும் மூலிகைத் தாவரங்களைப் பாதுகாத்து, அதனை இளந்தலைமுறையினருக்கு கையளிப்பது அவரது பிரதான இலக்காக உள்ளதாக அவர் தெரிவித்தார். இதுவரை சுமார் 130 மூலிகை வகைகள் அவரது தோட்டத்தில் உள்ளன. மேலும், மூலிகைத் தாவரங்களை சேர்க்கும் பணியில் அவர் தற்பொழுது ஈடுபட்டுள்ளார்.

அவரது பராமரிப்பிலுள்ள மூலிகைத் தாவரங்கள் அம்பாறை மாவட்டத்தில் மாத்திரமின்றி, வெளிமாவட்டங்கள், தூரப்பிரதேசங்களிலிருந்தும் பெறப்பட்டவை என தெரியவருகின்றன. இறைவனின் அருட்கொடையான மூலிகைத் தாவரங்கள் சிறந்த நோய் நிவாரணியாகும். நமது முன்னோர்கள் நோய்களின் போது, மூலிகைத் தாவரங்களைப் பயன்படுத்தி மருத்துவம் செய்து அதிகமான நோய்களுக்கு சுகம் கண்டுள்ளனர். ஆனால், தற்காலத்தில் மக்கள் அதனை மறந்து, நவீன மருத்துவ முறையை அதிகம் நாடியுள்ளனர்.

இதனால், நோய் முற்றாக குணமடைவதில்லை. பல்வேறு பக்க விளைவுகளுக்கும் ஆளாகி அவதியுறுவதாக ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் என்.சம்சுதீன தெரிவித்தார்.

## சாய்ந்தமருது பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

(கல்முனை குறூப் நிருபர்)

சாய்ந்தமருது பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக்கின் நெறிப்படுத்தலில் நேற்றுமுன்தினம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சாய்ந்தமருது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல். எம். அதாவுல்லா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேசத்தின் முக்கிய பிரச்சினைகள் மற்றும் கடந்தகால, நிகழ்கால அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

மேலும் மைதான அபிவிருத்தி, பாடசாலை மேம்பாடுகள், கல்வி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல், கடலரிப்பை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் உட்பட சமகால அபிவிருத்தி செயல்முறை தொடர்பாகவும் இதன்போது



விரிவாகக் கலந்துரையாடப்பட்டன. இந்நிகழ்வில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல். எம்.அஸ்மி, பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா, கணக்காளர் நுஸ்ரத் பானு, சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் ஏ. ஹிபதுல் கரீம், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள், திணைக்களங்களின் பிரதிநிதிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சாய்ந்தமருது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாவுல்லாவின் இணைப்பாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## பழைய மாணவர் சங்க அலுவலகம் திறந்து வைப்பு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) "பழைய மாணவர் சங்க பிரதிநிதிகளின் அலுவலகம்" பாடசாலை அதிபர் ஏ.எச்.பௌஸினால் அண்மையில் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

அதிபர் மற்றும் பழைய மாணவ சங்க பிரதிநிதிகளுக்கிடையிலான நல்லுறவை விரிவுபடுத்துவதற்கும், பாடசாலையில் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் மற்றும் பாடசாலை பௌதீக வள தேவைகளை இனம்கண்டு உடனடியாக பழைய மாணவர்கள் அதனை நிறைவேற்றி தருவதற்கு இது சிறந்ததொரு செயற்பாடாகும் என அதிபர் ஏ.எச். பௌஸ் இதன்போது தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கல்லூரியின் பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தவருக்கு சிறைத்தண்டனை

(வாச்சிக்குடா விசேட நிருபர்)

நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்த நபரொருவருக்கு 6 மாத கடூழிய சிறைத் தண்டனையும் ரூ.1500 அபராதமும் விதிக்கப்பட்டது. சந்தேகநபர் ஆலையடிவேம்பு, வாச்சிக்குடா பகுதியைச் சேர்ந்தவர் என தெரியவருகின்றது. இச்சம்பவம் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நடவடிக்கைகளை குழப்பும் வகையில் கூச்சலிட்டு, சத்தமிட்டு, அநாகரிகமாக செயற்பட்டதாக இவர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இவருக்கு 6 மாத கடூழிய சிறைத் தண்டனையும் ரூ.1500 அபராதமும் விதித்து அக்கரைப்பற்று நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்சாவினால் உத்தரவிடப்பட்டது.

## சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு பதவி நியமனம்





(முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்)

சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு புதிய பதவி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகவும், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் பதில் செயலாளராக ஏ.மன்சூர் மற்றும் பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) எம்.எம்.நசீர் ஆகியோருக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் நியமனம் வழங்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண ஆளுநராக பதவியேற்ற செந்தில் தொண்டமானின் இதுவரையான காலப்பகுதியில் மதம் சார்ந்து எந்த நியமனங்களையும் வழங்கவில்லை, தகுதி மற்றும் திறமைகளை அடிப்படையாகக் கொண்டே அரச நியமனங்களை அவர் வழங்கி வருவதாக கிழக்கு மாகாண ஆளுநர் செயலகம் தெரிவித்துள்ளது.

# இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கத்தின் மூலோபாய மைய முன்மொழிவு வெளியிடப்பட்டது

இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கம் அண்மையில் தனது திட்டடமான 'Sri Lanka Gemstone Hub Strategy Sapphire Capital of the World' (இரத்தினக்கல் மைய மூலோபாய நீல மாணிக்க உலகின் தலைநகரம் இலங்கை) இனை அரசாங்கத்திடம் கையளித்துள்ளது. இது தொடர்பான விழா சினமன் கிராண்ட் ஹோட்டலில் கடந்த ஓகஸ்ட் 24ஆம் திகதி நடைபெற்றது.

இவ்விழாவில் இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கத்தின் தலைவர் அஜ்வார்ட் டீன் உரையாற்றுகையில், "பல மாதகால உன்னிப்பான திட்டமிடல், கூட்டு முயற்சிகள் மற்றும் தொலைநோக்கு சிந்தனை ஆகியவற்றின் மூலம் இன்று நாம் பெருமையுடன் முன்வைத்துள்ள இந்த கருத்தறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த முக்கியமான படியை நாம் முன்னெடுத்துச் செல்வதற்கு, இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையை மேம்படுத்துவதற்கும் அதன் முன்னேற்றத்திற்கும் உறுதியான அர்ப்பணிப்புடன் செயற்படும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தொலைநோக்குப் பார்வையுடன் எமது அபிலாஷைகளை இணைத்துக்கொள்வதற்கு எமக்குக் கிடைத்த தனித்துவமான பாக்கியமாகும்.

இலங்கையின் வளர்ச்சியில் இந்தத் துறையின் முக்கிய பங்கை அங்கீகரித்து ஜனாதிபதி அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தமையும் இதற்கு ஒரு சான்றாகும்." என்றார். இவ்விழாவில் இலங்கையின் ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத், முதலீட்டு மற்றும் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இந்நிகழ்வில் இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையுடன் தொடர்புடைய பல்வேறு முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். கைத்தொழில் அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரண உட்பட பலர் கலந்துகொண்டனர்.



# UNDP மற்றும் Hatch இன் CONNECT திட்டம்



ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்துடன் (UNDP) இணைந்து, அறிவாற்றல் மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றின் எழுச்சியூட்டும் வெளிப்பாடாக, Hatch ஆனது இலங்கையில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட CONNECT Demo Day நிகழ்வில் புத்தாக்கமான வணிக தொடக்கங்களை (startups) காட்சிப்படுத்தியது. ஆர்வம் மற்றும் நெகிழ்ச்சித் தன்மை கொண்ட, சிறந்த 18 வணிக தொடக்கங்கள், நாட்டின் ஒளிமயமான மற்றும் நிலைபேறான எதிர்காலத்தை நோக்கிய பாதையை இங்கு வெளிச்சம் போட்டுக் காட்டின.

கொழும்பில் நடைபெற்ற இந்நிகழ்வில், நிலைபேறான உணவு விற்பனைச் சங்கிலிகள், புதுப்பிக்கத்தக்க சக்தி, சுகாதாரத் தொழில்நுட்பம், கல்வித் தொழில்நுட்பம் போன்ற முக்கிய துறைகளில் அத்தியாவசியத் தேவைகளை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட புத்தாக்க கண்டுபிடிப்புகள் காட்சிப்படுத்தப்பட்டன. இங்கு நம்பிக்கைக்குரிய தொழில்முனைவோர், இந்த தொலைநோக்குப் பார்வைக்கு வலுவான அர்ப்பணிப்புடன், முன்னேற்றத்தின் உண்மையான சிற்பிகளாக, இலங்கையை செழிப்பை நோக்கி அழைத்துச் செல்வதற்கு தங்களை அர்ப்பணித்துள்ளனர்.

# 2022 ஆம் ஆண்டிற்கான மிகவும் மதிப்புமிக்க நிறுவனங்கள் வரிசையில் HNB



இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கியான HNB PLC, 2022 ஆம் ஆண்டில் ஐந்தாவது தடவையாக இலங்கையின் மிகவும் மதிப்புமிக்க நிறுவனங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டது.

The American Institute of Certified Public Accountants மற்றும் Chartered Institute of Management Accountants (AICPA & CIMA), The International Chamber of Commerce Sri Lanka (ICCSL) ஆகியவற்றால் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த தரவரிசை, பங்குதாரர்களுக்கு நீடித்த மதிப்பை உருவாக்கி, நிறுவன சிறப்பை ஊக்குவிக்கும் இலங்கை நிறுவனங்களை அங்கீகரிக்க ஒரு தளமாக செயல்படுகிறது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி செயலாளர் சமன் ஏகநாயக்க கலந்துகொண்டதுடன், இந்த நிகழ்வில் முக்கிய உரையை இலங்கைக்கான ஜப்பானின் பிரதித் தூதுவர் Katsuki Kotaro நிகழ்த்தினார்.

# கொமர்ஷல் வங்கி தொடங்கியுள்ள "குத்தகை திருவிழா"



கொமர்ஷல் வங்கியின் மிகவும் பிரபலமான வாகனங்களுக்கான வரையறுக்கப்பட்ட கால குத்தகை ஊக்குவிப்பு ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் மீண்டும் அறிமுகமாகி உள்ளது. சந்தையில் இன்று கிடைக்கக் கூடிய ஆகக் குறைந்த வட்டி வீதம் மற்றும் ஏனைய வசதிகளுடன் இது அறிமுகமாகி உள்ளது.

இலங்கையின் தனிச்சிறப்பு மிக்க தனியார் வங்கி தனது "குத்தகை திருவிழா" 2023 செப்டம்பர் 27வரை அமுலில் இருக்கும் என அறிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் ஐந்தாண்டு காலத்துக்கான மாதாந்த குத்தகை கொடுப்பனவு ஒரு லட்சம் ரூபாவுக்கு 2,094 ரூபாவில் தொடங்குகின்றது. தனிப்பட்ட தேவைகளுக்காக புதிய அல்லது முன்னர் பாவிக்கப்பட்ட வாகனங்களின் கொள்வனவு, வர்த்தக மற்றும் விவசாய வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பனவற்றின் கொள்வனவுக்காக இந்த குத்தகை முறையைப் பயன்படுத்தலாம்.

மேலும் காப்புறுதி சந்தாக்களுக்கான இலகு தவணை கொடுப்பனவு முறை, உதிரிப்பாக கொள்வனவின் போது விஷேட கழிவு, குத்தகையில் பெறப்பட்ட வாகனத்துக்கான விஷேட பராமரிப்பு சேவைகள், குத்தகையை பெற நெருக்கடிகள் மற்றும் பரபரப்பற்ற அனுமதி சேவைகள் என்பனவும் வழங்கப்படும் என வங்கி அறிவித்துள்ளது.

மேலதிகமாக வாடிக்கையாளர்கள் தமது தனிப்பட்ட வருமான வசதிக்கு எற்றவிதத்தில் வடிவமைக்கப்பட்ட குத்தகைத் தெரிவுகள், வங்கியின் சுப்பர் குத்தகை மற்றும் ஓரளவு குத்தகை முறையிலான குத்தகை வசதிகள் என்பனவற்றையும் தெரிவு செய்து கொள்ள முடியும்.

# Abans - Diva Power சலவை புரட்சி




Abans Diva Power உடன் இணைந்து சிறப்பு ஊக்குவிப்புத் திட்டமொன்றை தற்போது நடத்தி வருகிறது. இதன் அடிப்படையில் அபான்ஸ் சலவை இயந்திரத்தை கொள்வனவு செய்பவர்களுக்கு washing liquid அல்லது Diva Powerஇனை இலவசமாக வழங்கப்படும். அபான்ஸ் சலவை

இயந்திரத்தை கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலவசமாக இந்த தயாரிப்பு வழங்கப்படுவதோடு, சீட்டிழுப்பு மூலம் தேர்வு செய்யப்படும் 2 நபர்களுக்கு ஒரு வருடத்திற்கு போதுமான Diva Power தயாரிப்புகள் இலவசமாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் புகழ்பெற்ற இரண்டு முன்னணி நிறுவனங்களான Abans மற்றும் Hemas Consumer Brands ஆகிய நிறுவனங்களுக்கு இலங்கை விற்பனை சந்தையில்; மிகச்சிறந்த அங்கீகாரம் உள்ளது. இதன் அடிப்படையில் இந்நிறுவனங்கள் தமது வாடிக்கையாளர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் நோக்கில் பலதரப்பட்ட தயாரிப்புகளை விற்பனை சந்தைகளுக்கு அறிமுகம் செய்துள்ளன.

நேரத்தை சேமித்து வீட்டிலுள்ள ஆடைகள் மற்றும் துணிகளை மிகவும் சுலபமாக சலவை செய்வதற்காக, தற்காலத்தில் சலவை இயந்திரம் இன்றியமையாத ஒரு உற்பத்தியாகும். இலங்கை சந்தைகளில் உள்ள சலவை இயந்திரங்களில் அபான்ஸ் சலவை இயந்திரமே முன்னணியில் உள்ளது.

# Hayleys Fabric மற்றும் Pro Green Laboratories இணைந்து FaBriEco ஐ அறிமுகப்படுத்துகிறது



இலங்கையின் முன்னணி ஆடை உற்பத்தியாளர்களில் ஒருவரான Hayleys Fabric PLC, தொழில்துறை கழிவுகளை சுற்றுச்சூழலுக்கு உகந்த கட்டுமானப் பொருட்களாக மாற்ற மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் Pro Green Laboratories உடன் கைகோர்த்துள்ளது.

FaBriEco ஒத்துழைப்பின் நோக்கம், ஆடைத் தொழில்துறையின் துணை தயாரிப்புகளான கழிவாக அகற்றப்படும் சாயங்கள், கழிவாக வீசப்படும் துணிகள் மற்றும் புகையாக பறக்கும் சாம்பல் போன்ற உற்பத்திக் கழிவுகளைப் பயன்படுத்தி உள்ளூர் சந்தைக்கு மலிவு விலையில், சுற்றுச்சூழலுக்கு ஏற்ற தயாரிப்புகளை உருவாக்குவதாகும். இந்த முயற்சியானது Pro Green Laboratoriesன் பேராசிரியர் ரங்கிகா யூ ஹல்வத்துரவின் செயற்பாடுகளின் கீழ் நடத்திய ஆய்வின் அடிப்படையில் அமைந்ததுடன் மண் கொன்கிரீட் செங்கற்கள் மற்றும் பாலிமர் சுயகச்சிதமான மண் செங்கற்கள் போன்ற நிலையான தயாரிப்புகளுக்கான காப்புரிமையை அவர் ஏற்கனவே பெற்றுள்ளார்.

"இந்தக் கூட்டாண்மை பசுமையான எதிர்காலத்தை உருவாக்க உதவும் என்று நாங்கள் நம்புகிறோம். Pro Green Laboratories உடன் எங்களின் நிலைத்தன்மை குழுவில் இணைவதன் மூலம், கழிவு நிர்வகிப்பு மற்றும் உற்பத்தியில் ஒரு நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்த முடியும், இது ஒரு வட்டப் பொருளாதாரத்திற்கு வழிவகுக்கும்." என Hayleys Fabric இன் முகாமைத்துவப் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி ரொஹான் குணதிலக்க தெரிவித்தார்.

# பற்குழி அற்ற தேசத்தை அடையும் க்ளோகார்ட்



பற்குழிகள் அற்ற தேசத்தை கட்டியெழுப்புவதற்கான சமூகப் பணியை, Hemas Consumer Brands இனது நம்பகமான வாய்ச் சுகாதார பராமரிப்பு வர்த்தகநாமமான க்ளோகார்ட் (Clogard), நீண்ட காலமாக முன்னெடுத்து வருகிறது. இதன் மூலம் கடந்த சில வருடங்களில் ஆயிரக்கணக்கான பாடசாலை மாணவர்களுக்கு சிறந்த வாய்ச் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வை அது ஏற்படுத்தியுள்ளது. இலங்கைச் சந்தையில் முன்னணியில் உள்ள மற்றும் பயனுள்ள வர்த்தக நாமங்களில் ஒன்று எனும் 30 வருட வரலாற்றை க்ளோகார்ட் கொண்டுள்ளது. அத்துடன் வாய்ச் சுகாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பான பொதுமக்களுக்கான இந்த முயற்சிகள் நாட்டு மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. வாய்ச் சுகாதார பராமரிப்பு தொடர்பான ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்கும், புத்தாக்கமான தயாரிப்புகளை வெளியிடுவதற்கும், வாய்ச் சுகாதாரம் தொடர்பான பாதுகாப்பு அணுகுமுறையை ஊக்குவிக்கும் விழிப்புணர்வு பிரச்சாரங்களை நடாத்துவதற்கும் க்ளோகார்ட் உறுதியுடன் இருந்து வருகிறது. கடந்த 10 வருடங்களாக, சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை (MOH) பிராந்திய அலுவலகங்களுடன் இணைந்து வாய்ச் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை க்ளோகார்ட் முன்னெடுத்து வருகின்றது. இது சிறந்த வாய்ச் சுகாதாரப் பழக்கவழக்கங்கள் தொடர்பான பாடத்திட்டத்திற்கு உதவியாக அமைகின்றது.

தற்போது 3 மாத திட்டமொன்றை க்ளோகார்ட் முன்னெடுத்து வருகிறது. இது அனைத்து ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கும் இலவச பல் பரிசோதனையை மேற்கொள்ள உதவுவதோடு, மேலதிக கவனம் தேவைப்படும் மாணவர்களை உரிய பல் நிபுணர்களிடம் செல்ல பரிந்துரைக்கின்றது.

# "அதிக பாராட்டு பெற்ற" காப்புறுதி கம்பனி செலிங்கோ லைஃப்



இலங்கையின் சர்வதேச வர்த்தக சபையால் (ICCSL) அமெரிக்காவின் சான்றளிக்கப்பட்ட பொது கணக்காளர் நிலையம் (AICPA) மற்றும் முகாமைத்துவ கணக்காளர்களின பட்டய நிறுவனம் (CIMA) என்பனவற்றின் ஒத்துழைப்புடன் நாட்டின் 'அதிக பாராட்டு பெற்ற பத்து கம்பனிகளில்' ஒன்றாக செலிங்கோ லைஃப் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கீர்த்திமிக இந்த பத்து முன்னணி கம்பனிகளின் பட்டியலிலும கௌரவ குறிப்புக்கு உள்ளாள ஐந்து கம்பனிகளிள் நிரலில் இடம் பிடித்தஓ. செலிங்கோ லைஃப் மட்டுமே ஒரேயொரு காப்புறுதி கம்பனி செலிங்கோ லைஃப் ஆகும். இம்முறை 2023 ஆகஸ்ட் 18ல் இடம் பெற்ற MAC எவார்ட்ஸ் விருது வழங்கும் நிகழ்வில் சிறந்த பத்து நிறுவன நிரலில் இடம்பிடித்த காப்புறுதி கம்பனியும் இதுவேயாகும்.

"கௌரவத்தைப் போலவே பாராட்டு என்பதும் மிகவும் கஷ்டப்பட்டு உழைக்கும் ஒன்றாகும். இது புறநிலை மற்றும அகநிலை அளவீடுகளை அடிப்படையாகக் கொண்டது" என்று கூறினார் செலிங்கோ லைஃப்பின் முகாமைத்துவப் பணிப்பாளர் துஷார ரணசிங்க. "செலிங்கோ லைஃப்பில் நாம் எப்போதும் நிதிச் செயற்பாடு, ஒத்துணர்வாந்றல் சமூகப் பொறுப்பு மற்றும் நல் ஆளுகை என்பன போன்ற தரநிர்ணய குறிகாட்டிகள் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம்.

எனவே பல்வேறு செயற்பாடுகளையும் நடைமுறைகளையும் கவனத்தில் கொண்டு விரிவானதோர் மூன்றாம் தரப்பின் மதிப்பீட்டின் மூலம் இலங்கையின் மிகவும் பாராட்டுப்பெற்ற மிக்க கம்பனிகளில் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறித்தும் இந்த அங்கீகாரம் குறித்தும் நாம் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றோம்" என்று அவர் மேலும் கூறினார்.



## ஆசிய கிண்ணம்:

# பாகிஸ்தானை வீழ்த்திய இலங்கை இந்தியாவுடனான இறுதிக்கு தகுதி

பாகிஸ்தானுக்கு எதிரான சுப்பர் 4 போட்டியில் கடைசி பந்து வரை நீடித்த பரபரப்புக்கு மத்தியில் 2 விக்கெட்டுகளால் த்ரில் வெற்றி பெற்ற இலங்கை அணி ஆசிய கிண்ணத் தொடரில் இந்தியாவுக்கு எதிரான இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

கொழும்பு, ஆர். பிரேமதாச மைதாயத்தில் நேற்று முன்தினம் (14) நடைபெற்ற இந்தப் போட்டி மழைக்கு மத்தியில் 42 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் டக்வர்த் லுவிஸ் முறையில் இலங்கை அணிக்கு 252 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதன்போது இலங்கை அணியின் வெற்றிக்கு கடைசி இரண்டு பந்துகளுக்கு ஆறு ஓட்டங்கள் பெற வேண்டி ஏற்பட்டது. சமான் கான் வீசிய ஐந்தாவது பந்துக்கு சரித் அசலங்க வேகமாக துடுப்பை சுழற்றியபோது பந்து முனையில் பட்டு ஸ்லிப் திசையில் பௌண்டரியை நோக்கி சென்றது.

தொடர்ந்து கடைசி பந்துக்கு இரண்டு ஓட்டங்கள் பெற வேண்டிய நிலையில் அசலங்க நிதானமாக அடித்து அந்த இரண்டு ஓட்டங்களையும் இலகுவாக பெற்று இலங்கையின் வெற்றியை உறுதி செய்தார்.

இதன்போது இலங்கை அணிக்கு குசல் மெண்டிஸ் 87 பந்துகளில் 91 ஓட்டங்களையும் சதீர சமரவிக்ரம 48 ஓட்டங்களையும் பெற்று கைகொடுத்தனர். எனினும் கடைசி நேரத்தில் அடுத்தடுத்து விக்கெட்டுகள் பறிபோனதால் பாகிஸ்தான் பக்கம் ஆட்டம் திசை திரும்பியது.

எனினும் சரித் அசலங்க 47 பந்துகளில் ஆட்டமிழக்காது 49 ஓட்டங்களை பெற்று இலங்கை அணியை வெற்றி வரை அழைத்துச் சென்றார்.

இந்தப் போட்டியில் இலங்கை அணியில் இரண்டு மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. ஆரம்ப வீரர் திமுத் கருணாரத்ன நீக்கப்பட்டு அவருக்கு பதில் உபாதையில் இருந்து மீண்டிருக்கும் குசல் ஜனித் பெரேரா அழைக்கப்பட்டார். அதேபோன்று கசுன் ராஜித்தவுக்கு பதில் பிரமோத் மதுஷான் அழைக்கப்பட்டார்.

மழை காரணமாக தாமதித்து ஆரம்பமான இந்தப் போட்டி 45 ஓவர்கள் குறைக்கப்பட்ட நிலையில் நாணய சுழற்சியில் வென்று துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியின் இன்னிங்ஸின் பாதியில் மழை குறுக்கிட்டதால் 42 ஓவர்களாக குறைக்கப்பட்டது.

இதில் பாகிஸ்தான் அணி 42 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 252 ஓட்டங்களை பெற்றது. மொஹமட் ரிஸ்வான் ஆட்டமிழக்காது 86 ஓட்டங்களை பெற்றார்.

பந்துவீச்சில் மதீஷ பதிரண 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இந்த வெற்றியுடன் இலங்கை அணி நாளை கொழும்பு, ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெறும் இந்திய அணிக்கு எதிரான ஆசிய கிண்ண இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

இலங்கை அணி ஆசிய கிண்ண இறுதிப் போட்டிக்கு முன்னேறுவது இது 11ஆவது தடவையாகும்.

## அம்பாறையில் டென்னிஸ் விளையாட்டுத் திடல் திறப்பு

மாளிகைக்காடு குறூப் நிருபர்



டென்னிஸ் விளையாட்டுத் துறையினை அம்பாறை மாவட்டத்தில் பிரபல்யப்படுத்தும் நோக்கில் அம்பாறை நகரசபை மைதானத்தின் ஒரு பகுதியில் டென்னிஸ் விளையாட்டு திடல் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை (10) திறந்து வைக்கப்பட்டது.

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டொக்டர். திலக் ராஜபக்ஷ, அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எச்.ஏ.என்.கே. தமயந்த விஜய சிறி, இலங்கை டென்னிஸ் சங்க தவிசாளர் இக்பால் இஸ்ஹாக், இலங்கை இராணுவ 24ஆவது காலாட் படைபிரிவின் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்திர சிறி ஆகியோர் டென்னிஸ் கூடத்தின் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வைத்தனர்.

இந்நிகழ்வில் முன்னாள் பொலிஸ் சிரேஸ்ட உயர் அத்தியட்சகர்கள், உதவி பொலிஸ் அதிகாரிகள், கிழக்கு மாகாண முப்படை உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், பொலிஸார் மற்றும் பொதுமக்கள் கலந்து சிறப்பித்தனர்.

# இங்கிலாந்திடம் இலங்கை மகளிர் தொடர் தோல்வி

நெட் சிஸ்வர் பிரன்டின் அதிரடி சதத்தின் உதவியோடு இலங்கை மகளிர் அணிக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் 161 ஓட்டங்களால் வெற்றியீட்டிய இங்கிலாந்து மகளிர் அணி ஒருநாள் தொடரையும் 2–0 என கைப்பற்றியது.

லெய்செஸ்டரில் நேற்று முன்தினம் (14) நடைபெற்ற இந்தப் போட்டி சீரற்ற காலநிலை காரணமாக 31 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இதில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து மகளிர் அணி 18 ஓட்டங்களுக்கு முதல் இரு விக்கெட்டுகளையும் இழந்தபோதும் மூன்றாவது விக்கெட்டுக்கு இணைந்த அணித் தலைவி பிரன்ட் மற்றும் மையா பௌசர் 193 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்து கொண்டனர்.

இதன்போது பிரன்ட் தனது எட்டாவது ஒருநாள் சதத்தை 66 பந்துகளில் பெற்று இங்கிலாந்து அணிக்காக அதிவேக சதம் பெற்ற வீராங்கனையாக சாதனை படைத்தார். அதில் அவர் 70 பந்துகளில் சதம் பெற்ற சார்லட் எட்வட்ஸின் சாதனையையே முறியடித்தார்.




கடைசியில் பிரன்ட் 74 பந்துகளில் 14 பௌண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் 120 ஓட்டங்களை பெற்றதோடு மறுபுறம் பௌசர் 95 ஓட்டங்களுடன் சதத்தை தவற விட்டார்.

இதன்மூலம் இங்கிலாந்து மகளிர் அணி 31 ஓவர்களுக்கும் 8 விக்கெட்டுகளை இழந்து 273 ஓட்டங்களை பெற்றது.

இலங்கை மகளிர் சார்பில் கவிஷா டில்ஹாரி 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தார். என்றாலும் அவர் 4 ஓவர்களில் 43 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தார். இலங்கை மகளிர் அணி ஏழு பந்துவீச்சாளர்களை பயன்படுத்தியபோதும் இங்கிலாந்தின் ஓட்ட வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல்போனது.

பதிலெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி ஆரம்பம் தொட்டு அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

மத்திய வரிசையில் ஹசினி பெரேரா அதிகபட்சமாக 32 ஓட்டங்களை பெற்றபோதும் வேறு எவரும் 16 ஓட்டங்களை கூட தொடவில்லை.

இதனால் இலங்கை மகளிர் அணி 24.5 ஓவர்களில் 112 ஓட்டங்களுக்கே சுருண்டது. பந்துவீச்சில் சார்லி டீ 5 விக்கெட்டுகளையும் லோரன் பிலர் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை மகளிர் அணி ஒருநாள் தொடரை இழந்தபோதும் முன்னதாக நடந்த டி20 தொடரை கைப்பற்றி சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது.

# உபாதையால் மஹீஷ் தீக்ஷன இறுதிப் போட்டியில் சந்தேகம்

பாகிஸ்தானுக்கு எதிரான சுப்பர் 4 போட்டியின்போது உபாதைக்கு உள்ளான இலங்கை சுழற்பந்து வீச்சாளர் மஹீஷ் தீக்ஷன நாளை (17) நடைபெறும் இந்தியாவுக்கு எதிரான ஆசிய கிண்ண இறுதிப் போட்டியில் விளையாடுவதில் சந்தேகம் எழுந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் பௌண்டரி ஒன்றை தடுக்க முயன்றபோது தீக்ஷனவுக்கு தொடைப் பகுதியில் தசைப்பிடிப்பு ஏற்பட்டது. தொடர்ந்து அவர் பந்துவீசியபோதும் வலியுடனேயே தொடர்ந்து ஆடியது தெரிந்தது.

தீக்ஷனவின் காயம் எந்தளவு உள்ளது என்பதை மதிப்பீடு செய்வதற்கே உடன் முன்னுரிமை அளிக்கப்படுகிறது என்று இலங்கை கிரிக்கெட் சபையின் மூத்த அதிகாரி ஒருவர் செய்தி இணையதளம் ஒன்றுக்கு குறிப்பிட்டிருந்தார். இந்நிலையில் அவருக்கு நேற்று ஸ்கேன் சோதனை செய்யப்பட்டது.

இந்நிலையில் அவரை அணியில் இணைப்பதில் அவதானத்துடன் இருப்பதாக அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார். "உலகக் கிண்ணம் நெருங்கியுள்ளநிலையில் நாம் எந்த ஓர் அச்சுறுத்தலுக்கு உரிய முடிவையும் எடுக்க மாட்டோம்" என்றும் அவர் தெரிவித்தார்.



ஆசிய கிண்ண இறுதிப் போட்டியில் தீக்ஷனவை ஆடவைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றபோதும் அவரில்லாத பட்சத்தில் சுழற்பந்து வீச்சாளர் துஷான் ஹேமன்த அல்லது இலங்கைக் குழாத்தில் இருக்கும் வேகப்பந்து வீச்சாளர் ஒருவரை அழைக்க வாய்ப்பு உள்ளது. மைதானம் மற்றும் அணியின் திட்டத்திற்கு அமையவே வீரர் தேர்வு செய்யப்பட வாய்ப்பு உள்ளது.

இலங்கை அணி நான்கு முன்னணி பந்துவீச்சாளர்கள் இன்றியே ஆசிய கிண்ணத் தொடரில் விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. சுழல்பந்து சகலதுறை வீரர் வனிந்து ஹசரங்க மற்றும் வேகப்பந்து வீச்சாளர்களான துஷ்மந்த சமீர, லஹிரு குமார மற்றும் டில்ஷான் மதுஷங்க ஆகியோர் அணியில் இடம்பெறவில்லை.

# சச்சித்ரவுக்கு செப். 25 வரை தொடர்ந்தும் விளக்கமறியல்

ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டுக்கு முகம்கொடுத்திருக்கும் இலங்கை அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் சச்சித்ர சேனநாயக்கவை எதிர்வரும் செப்டெம்பர் 25 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று (15) உத்தரவிட்டது.

விளையாட்டு அமைச்சின் சிறப்பு விசாரணை பிரிவுக்கு சென்ற சச்சித்ர சேனநாயக்க கடந்த செப்டெம்பர் 6 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

2020 ஆம் ஆண்டு நடைபெற்ற லங்கா பிரீமியர் லீக் போட்டியின் போது அதில் ஆடும் இரு வீரர்களை டுபாயில் இருந்து தொலைபேசியில் அழைத்து ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபடுத்த முயற்சித்ததாகவே சச்சித்ர மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் சந்தேக நபரை பிணையில் விடுவிப்பதற்கு சட்டமா அதிபர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக சச்சித்ர சேனநாயக்கவிடம் குரல் சோதனை மேற்கொள்வதற்காக அவர் அரசாயங்க இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்.

ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டு தொடர்பில் கிடைத்திருக்கும் ஒலிநாடாவுடன் தொடர்புபட்ட குரல் சோதனை ஒன்றுக்காகவே அவர் கடந்த புதன்கிழமை (13) பொலிஸ் பாதுகாப்புடன் அங்கு அழைத்துச் செல்லப்பட்டார். சச்சித்ர இந்த குற்றச்சாட்டுடன் தொடர்புபட்டிருப்பதை உறுதி செய்வதற்கு அவர் மீது குரல் சோதனை மேற்கொள்ள உத்தரவிடும்படி சட்டமா அதிபர் நீதிமன்றத்தை கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



சச்சித்ர இந்த குற்றச்சாட்டுகளை நிராகரித்திருப்பதோடு தனது மற்றும் தனது குடும்பத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்த செய்யப்பட்ட அடிப்படையற்ற குற்றச்சாட்டுகள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

38 வயதான சச்சித்ர சேனநாயக்க இலங்கை அணிக்காக ஒரு டெஸ்ட், 49 ஒருநாள் மற்றும் 24 டி20 சர்வதேச போட்டிகளில் ஆடியுள்ளார்.

# போதை கடத்தல் விவகாரத்தில் ஆஸி. முன்னாள் வீரர் கைது




அவுஸ்திரேலிய முன்னாள் கிரிக்கெட் வீரர் ஸ்டுவட் மக்கில், கொக்கைன் போதைப்பொருள் விநியோக குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய அணிக்காக 44 டெஸ்ட் போட்டியில் ஆடி இருக்கும் சுழற்பந்து வீச்சாளரான 52 வயது மக்கில் கடந்த செவ்வாய்க்கிழமை (12) சிட்னியில் கைதுசெய்யப்பட்டார்.

2021இல் மக்கில் கடத்தப்பட்டு தாக்குதலுக்கு உள்ளானதாக கூறப்படும் சம்பவத்தை தொடர்ந்தே அவர் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. மக்கில் தன்மீதான குற்றச்சாட்டை இன்னும் மறுக்காதபோதும் தான் போதைப்பொருள் விநியோகத்துடன் தொடர்புபடவில்லை என்று முன்னதாக கூறியிருந்தார்.

சிட்னி புறநகர் பகுதியான கரமோர்னேவில் வைத்து தாம் வலுக்கட்டாயமாக கார் வண்டி ஒன்றுக்குள் ஏற்பட்டு தாக்கப்பட்டதாக 2021 ஏப்ரலில் அவர் பொலிஸாருக்கு கூறியது அப்போது பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது. இந்த சம்பவத்தில் மக்கில்லுக்கு சிறு காயமும் ஏற்பட்டிருந்தது.

இந்த சம்பவம் தொடர்பில் அப்போது மக்கில்லின் தோழியின் சகோதரர் உட்பட ஆறு பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இது தொடர்பில் கடந்த இரண்டு ஆண்டுகளாக நீடித்த விசாரணைகளின் பின் மக்கில் மீதும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. தடைசெய்யப்பட்ட போதைப்பொருளை வியாபார ரீதியில் பயன்படுத்தும் வகையில் பெரிய அளவில் விநியோகித்தது தொடர்பிலேயே இந்த குற்றச்சாட்டு அமைந்துள்ளது.

இதில் 300,000 டொலர் பெறுமதிக்கு மேற்பட்ட போதைப் பொருள் தொடர்புபட்டிருப்பதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மக்கில் பிணையில் விடுவிக்கப்பட்டிருப்பதோடு எதிர்வரும் ஒக்டோபர் 26 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகவுள்ளார்.

ஒரு தருணத்தில் டெஸ்ட் தரவரிசையில் சக வீரர் ஷேன் வோர்னுக்கு அடுத்து இரண்டாவது இடத்திற்கு முன்னேறிய மக்கில் 1998 தொடக்கம் 2008 வரை அவுஸ்திரேலிய அணிக்காக விளையாடியுள்ளார்.